விலை: 50.00
பக்கங்கள் - 16

Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26

ஒலி 139 வள்ளுவர் ஆண்டு 2056 சித்திரை 24 புதன்கிழமை (07.05.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829



NORTHERN UNI

SLIIT உயர்கல்வி நிறுவனத்தின்
BSc (Hons) in IT
&
BBA (Hons)
இளமாணி பட்டப்படிப்புகளுக்கான
அனுமதிகள் ஆரம்பம் - 2025

SLIIT NORTHERN UNI, 239 Arasadi Road, Kantharmadam Junction, Jaffna
021 7534 807
(C-2910)


## தேசிய மக்கள் சக்தி தெற்கில் முன்னிலை

### பல இடங்களில் தொங்கு சபை

(கொழும்பு)

வெளியாகியுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தல்முடிவுகளின்படி ஆளும் அரசாங்கத்தின் தேசிய மக்கள் சக்தி பல இடங்களில் முன்னிலை வகிக்கின்றது.

அதன்படி காலி மாவட்டத்தின் ஹிக்கடுவை நகர சபை, கண்டி மாவட்டத்தின் வத்தேகம நகர சபை, இரத்தினபுரி 15ஆம் பக்கம் பார்க்க

## கிளிநொச்சி முழுவதும் தமிழரசுக் கட்சி வசமானது

(கிளிநொச்சி)



வெளியாகியுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவுகளின்படி கிளிநொச்சியிலுள்ள கரைச்சி பிரதேச சபை, பச்சிலைப்பள்ளி (பளை) பிரதேச சபை, பூநகரி பிரதேச சபை ஆகியவற்றில் பெரும்பான்மையுடன் இலங்கைத் தமிழரசுக் கட்சி வெற்றி பெற்றுள்ளது.

அதன்படி கரைச்சி 15ஆம் பக்கம் பார்க்க

### தமிழர் தாயகத்தில்

# தமிழரசுக் கட்சி, முன்னணி பல சபைகளைக் கைப்பற்றியது

*(யாழ்ப்பாணம்)*

**தமிழர் தாயகமான வடக்கு, கிழக்கில் இலங்கைத் தமிழரசுக் கட்சி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகியன பெரும்பாலான சபைகளைக் கைப்பற்றியுள்ளன. பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட அநுர அரசாங்கத்தின் தேசிய மக்கள் சக்தி வடக்கு, கிழக்கில் சோபிக்கவில்லை.**

அதன்படி யாழ்ப்பாண மாவட்டத்தில் யாழ்.மாநகர சபையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் நல்லூர் பிரதேச சபையில் இலங்கைத் தமிழரசுக் கட்சியும் வல்வெட்டித்துறை நகர சபையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் பருத்தித்துறை நகர சபையில் இலங்கைத் தமிழரசுக் கட்சியும் நெடுந்தீவுப் பிரதேச சபையில் இலங்கைத் தமிழரசுக் கட்சியும் வலிகாமம் வடக்கில் இலங்கைத் தமிழரசுக் கடசியும் கரவெட்டி பிரதேச சபையில் இலங்கைத் தமிழரசுக் கட்சியும் சாவகச்சேரி பிரதேச சபையில் இலங்கை தமிழரசுக் கட்சியும் வெற்றி பெற்றுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில் பச்சிலைப்பள்ளி, கரைச்சி, பூநகரி பிரதேச 16ஆம் பக்கம் பார்க்க

## அமைதியான தேர்தல்

(கொழும்பு)

இலங்கையில் நேற்று உள்ளூராட்சி சபைத் தேர்தல் அமைதியாக நடைபெற்றது.

காலை 7 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரை பொதுமக்கள் தங்களுக்குரிய வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்று வாக்குகளை சுமுகமாக அளித்துள்ளனர்.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தல் போல் நேற்று நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலும் அமைதியாக இடம்பெற்றுள்ளது. 15ஆம் பக்கம் பார்க்க

## நாடு முழுவதும் சுமார் 60% வாக்குப் பதிவு

(கொழும்பு)

நேற்று நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் நாடு முழுவதும் சுமார் 60 சதவீத வாக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அதன்படி யாழ்.மாவட்டத்தில் 56.6 சதவீத வாக்குகளும் மன்னார் மாவட்டத்தில் 70.15 சதவீத வாக்குகளும் வவுனியா மாவட்டத்தில் 59.56 சதவீத வாக்குகளும் கிளி 15ஆம் பக்கம் பார்க்க

## உலக வங்கித் தலைவர் இன்று இலங்கை விஜயம்



(கொழும்பு)

உலக வங்கியின் தலைவர் அஜய் பங்கா இன்று புதன்கிழமை இலங்கைக்கு வருகை தரவுள்ளார்.

உலக வங்கியின் தலைவர் சுமார் 20 ஆண்டுகளுக்குப் பின்னர் இலங்கைக்கு வருகை தரவுள்ளார்.

இலங்கையின் பொருளா 15ஆம் பக்கம் பார்க்க

## யாழ்ப்பாண மாநகர சபை

| | |
|---|---|
| தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி | 11 |
| இலங்கைத் தமிழரசுக் கட்சி | 10 |

(யாழ்ப்பாணம்)

கிடைக்கப் பெற்ற தேர்தல் முடிவுகளின் படி யாழ்ப்பாண மாநகர சபையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி 11 ஆசனங்களையும் இலங்கைத் தமிழரசுக் கட்சி 10 ஆசனங்களையும் தேசிய மக்கள் சக்தி 4 ஆசனங்களையும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி இரு ஆசனங்களையும் கைப்பற்றியுள்ளது. (ம-7,4)

*(கிடைக்கப் பெற்ற தகவலின்படி)*

## உள்ளூராட்சித் தேர்தலில் வெற்றி பெறுவோம்

### ஜனாதிபதி அநுர நம்பிக்கை

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தாம் வெற்றி பெறுவோம் என்று ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க நேற்று நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

நேற்றுத் தேர்தலில் வாக்களித்த பின்னர், ஊடகங்களிடம் கருத்து வெளியிடும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக் 15ஆம் பக்கம் பார்க்க

## காரைநகரில் வேட்பாளரை தாக்கி சங்கிலி அறுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் காரைநகரில் தமிழ் மக்கள் கூட்டணியின் வேட்பாளர் மீது தாக்குதல் மேற்கொண்டு, அவரது சங்கிலியும் அறுக்கப்பட்டுள்ளா 15ஆம் பக்கம் பார்க்க

### வல்வெட்டித்துறைப் பொலிஸ் பிரிவில்

## பற்றைக் காட்டுக்குள் இளைஞனின் சடலம் மீட்பு

(கரணவாய்)




வல்வெட்டித்துறைப் பொலிஸ் பிரிவில் பற்றைக் காட்டுக்குள் இளைஞன் ஒருவரின் சடலம் நேற்று முன்தினம் மீட்கப்பட்டுள்ளது.

இதில் அல்வாய் வட மத்தியைச் சேர்ந்த பாஸ்கரன் பரந்தாமன் (வயது-25) என்பவரே சடலமாக மீட் 15ஆம் பக்கம் பார்க்க




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



தோற்றம்
05 - 03 - 1945

மறைவு
04 - 05 - 2025

## சின்னத்துரை சண்முகலிங்கம்

(முன்னாள் உபஅதிபர் யா/சங்குவேலி அ.த.க பாடசாலை,
உரிமையாளர் – சண்யோ கோப்பி & கூல்பார் – சுன்னாகம்)

இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் இரத்தினவாசம், இணுவில் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. சின்னத்துரை சண்முகலிங்கம் அவர்கள் (04.05.2025) ஞாயிற்றுக்கிழமை இயற்கை எய்தினார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - லில்லிமலர் தம்பதியினரின் பாசமிகு புதல்வரும் காலஞ்சென்றவர்களான திருவிளங்கம் - இரத்தினம் தம்பதியினரின் அன்பு மருமகனும் சந்திராதேவியின் பாசமிகு கணவரும், பிரசாந்த், துஷித்தா, ரஜீவ்சாந்த் ஆகியோரின் அன்புத் தந்தையும் சுமித்திரா, கோகுலன், சத்தியா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் திவ்யேஷ், ரிஷிகேஷ் ஆகியோரின் அன்பு அம்மப்பாவும் சுந்தரலிங்கம், சிவநேசலிங்கம், தேவசேனா, காலஞ்சென்ற இந்திரசேனா மற்றும் விஜயசேனா, அமிர்தலிங்கம், பதுமசேனா ஆகியோரின் பாசமிகு சகோதரரும் மண்டலநாயகி, பாமதி, காலஞ்சென்றவர்களான உருத்திராங்கதன், கனகநாயகம் மற்றும் சுந்தரலிங்கம், லோகேஸ்வரி, அருள்நேசன் ஆகியோரின் அன்புச் சகலரும் யோகராஜா, மாலினிதேவி, ஸ்ரீஸ்கந்தராஜா, சகலகலாதேவி, கௌரிதேவி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.05.2025) வியாழக்கிழமை பகல் 09.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்து செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

வன்னியசிங்கம் வீதி,
இணுவில் தெற்கு, இணுவில்
(4118)

தகவல்:
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



மலர்வு
07 - 10 - 1935

உதிர்வு
06 - 05 - 2025

## சின்னத்தம்பி தர்மலிங்கம்

(ஓய்வு பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்)

கந்தரோடை மடத்தடியைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி தர்மலிங்கம் அவர்கள் நேற்று (06.05.2025) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - முத்துப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மகனும் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - செல்லம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும் காலஞ்சென்ற நாகேஸ்வரி (இராசாத்தி) அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சிவக்கொழுந்து, பாக்கியம், தங்கம்மா, பர்வதம், கந்தசாமி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் சுபாஸ்கரன் (ராஜீ - சுவிஸ்), சுகிர்தா, கேதீஸ்வரன் (ஈசன் - சுவிஸ்), விஜிகரன் (விஜி - சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கேமேஸ்வரி, குகநேசன் (இளைப்பாறிய கட்டடத் திணைக்களப் பொறியியலாளர்), சசிவதனி, ரஜிதா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஜனனி, சதீனா, விதுசி, மிதுலா, சகானா, சஜிதன், கிருத்திகா, தர்சனா, சஜித் ஆகியோரின் பாசமிகு பேரனும் அஞ்சனா, ஜானவி ஆகியோரின் பூட்டனுமாவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (09.05.2025) வெள்ளிக்கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காலை 10 மணியளவில் தகனக்கிரியைக்காக வல்லை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.

077 238 9864
021 205 8531
(4119)

தகவல் :
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



மலர்வு
29.10.1968

உதிர்வு
05.05.2025

## தில்லையம்பலவாணர் கோபாலகிருஷ்ணன்

(விவாக இறப்பு பிறப்பு பதிவாளர், புத்தூர், சமாதான நீதவான்,
நிரந்தர தர்மகர்த்தா உறுப்பினர் (யா/சோமாஸ்கந்தக் கல்லூரி, புத்தூர்)
உரிமையாளர் – சபேஸ் ரேடர்ஸ் – புத்தூர்)

புத்தூர் மேற்கு புத்தூரைச் சேர்ந்த தில்லையம்பலவாணர் கோபாலகிருஷ்ணன் (05.05.2025) திங்கட்கிழமை அன்று இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தில்லையம்பலவாணர் மற்றும் சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்ற ஜெகநாதன் மற்றும் சோதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் சுதாஜினி (ஆசிரியை - யா/சோமாஸ்கந்தக் கல்லூரி, புத்தூர்) அவர்களின் அன்புக் கணவரும் துவாரகன், தமிழினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற சம்பந்தன் மற்றும் விமலன் (பணிப்பாளர் - வடமாகாணம் காணி சீர்திருத்த ஆணைக்குழு) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சுகுமார் - ஜெயசிறி (ஜேர்மனி), தற்பரன் (சட்டத்தரணி), D.R றமிலாதேவி, நளினி, சந்தானலஷ்மி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.05.2025) புதன்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக புத்தூர் கிந்துசிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"சர்வோதயம்"
புத்தூர் மேற்கு, புத்தூர்.

077 780 5394
077 873 3407
(C-2911)

தகவல் :
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சிமன்றத் தேர்தல் - 2025




(யாழ்ப்பாணம்)

2025 ஆம் ஆண்டிற்கான உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நேற்றுக் காலை 7 மணிக்கு ஆரம்பமாகி மாலை 4 மணிவரை நாடளாவிய ரீதியில் சுமூகமான முறையில் நடைபெற்றது.

இதன் போது பொதுமக்கள் மற்றும் அரசியல் பிரமுகர்கள் வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்று வாக்குப் பதிவு நடவடிக்கைகளில் ஈடுபட்டு இருந்தனர்.

நாட்டில் 341 உள்ளூராட்சி மன்றங்கள் உள்ள நிலையில், இம்முறை 339 உள்ளூராட்சி மன்றங்களுக்கு மாத்திரம் தேர்தல் இடம்பெற்றது.

இதனிடையே தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்காக உள்நாட்டு கண்காணிப்பாளர்கள் 4,450 பேர் ஈடுபட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

(6-8-33-60-250-285-299-316)

## நல்லை ஆதீன சுவாமிகளின் நினைவுப் பிரார்த்தனை



(யாழ்ப்பாணம்)

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் இரண்டாவது குரு மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளின் நினைவுப் பிரார்த்தனை வைபவமும் சுவாமிகளின் அஸ்தி பிரதிஸ்டையும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நல்லை ஆதீன மண்டபத்தில் இடம்பெறவுள்ளது என நல்லை ஆதீன ஆளுநர் சபையினர் தெரிவித்துள்ளனர். (3-8)

## கேலிச்சித்திர காட்சிப்படுத்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக நுண்கலைத்துறை மாணவர் அமைப்பாகிய கலை வட்டத்தின் ஏற்பாட்டில் நுண்கலை துறையின் விடுகை வருட மாணவர்களாகிய ஸ்ரீ கிருபாகரன் டிசானி, பஞ்சலிங்கம் லஜீபன் ஆகிய இருவரது எடுத்தாளுகையில் "சமூக கட்டமைப்பும் கட்டுடைப்பும்: சிரித்திரன் சுந்தரின் கேலிச்சித்திரங்களின் காட்சி" எனும் தலைப்பின் கீழ் கேலிச் சித்திரப் படைப்பாளியான சிவஞானசுந்தரம் (சிரித்திரன் சுந்தர்) என்பவரின் படைப்புக்களின் காட்சிப்படுத்தலானது ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக கலைக் கூடத்தில் இடம்பெறவுள்ள இக்காட்சியிடலானது நாளை 8ஆம் திகதி வியாழக்கிழமையிலிருந்து எதிர்வரும் 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரையான நாட்களில்12 ஆம் திகதி மற்றும் 13 ஆம் திகதி ஆகிய விடுமுறை தினங்கள் தவிர்ந்த ஏனைய நாட்களில் பார்வையாளர்களுக்காக காலை 10 மணியிலிருந்து மாலை 5 மணிவரை திறந்திருக்கும். (3-8)

### கார் ஒன்றில் மறைத்து வைத்திருந்த 2 வாள்கள் மீட்பு

## இருவர் கைது

(தருமபுரம்)

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட செல்வா நகர் பகுதியில் வாக்களிப்பு நிலையத்துக்கு அண்மித்த பகுதியில் சிறிய ரக கார் ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் இரண்டு வாள்களுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைவாக வாள்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதுடன் இரண்டு சந்தேக நபர்களையும் அந் நபர்கள் பயன்படுத்திய காரையும் பறிமுதல் செய்துள்ளனர்.

கைதான நபர்களை விசாரணைகளின் பின்னர் கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்துள்ளனர். (6-8-316)

## வாக்கு சாவடிக்கு அருகில் துண்டுப்பிரசுரம் விநியோகம்

### வள்ளிபுனத்தில் ஒருவர் கைது

(நெளுக்குளம்)

தேர்தல் விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் வள்ளிபுனம் பகுதியில் வைத்து ஒருவர் கைது செய்யப்பட்ட சம்பவம் ஒன்று நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்திற்குட்பட்ட வள்ளிபுனம் பகுதியில் வாக்குச் சாவடிக்கு அண்மித்த பகுதியில் வீட்டுச்சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளரின் ஆதரவாளர் ஒருவர் சின்னம் அடங்கிய துண்டுப்பிரசுரத்தினை மக்களுக்கு விநியோகம் செய்த குற்றச்சாட்டில் புதுக்குடியிருப்பு பொலிஸார், தேர்தல் திணைக்கள உத்தியோகத்தர்கள் இணைந்து குறித்த நபரை கைது செய்து புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையம் அழைத்து செல்லப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை புதுக்குடியிருப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (6-8-299)

## 22 லீற்றர் கசிப்புடன் ஒருவர் பொலிஸாரால் கைது

(தருமபுரம்)

பேருந்து ஒன்றில் நூதனமான முறையில் பயணப் பையில் மறைத்து எடுத்துச் செல்லப்பட்ட 22 லீற்றர் கசிப்புடன் நேற்று முன்தினம் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.


தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட புளியம் பொக்கணைப் பகுதியிலிருந்து யாழ் நோக்கிப் பயணித்த பேருந்து ஒன்றில் எடுத்துச் செல்ல முற்பட்ட வேளை தருமபுர பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய குறித்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இந் நிலையில் கைதான நபரை கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தருமபுர பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பி.எம்.சதுரங்க தெரிவித்தார். (6-8-316)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றி 'மழையில்' குஜராத் அதிர்ஷ்டம் இல்லாத மும்பை

## புள்ளிப் பட்டியலிலும் முன்னோக்கிப் பாய்ந்தது



மழையால் பாதிக்கப்பட்ட இந்தியன் பிரிமியர் போட்டியில் குஜராத் அணி, "டக்வொர்த் லீவிஸ்" விதிப்படி 3 விக்கெட்டுகளால் "திரில்" வெற்றி பெற்றது.

மும்பை, வான்கடே மைதானத் தில் நடந்த பிரிமியர் லீக் போட்டியில் மும்பை - குஜராத் அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்ற குஜராத் அணித் தலைவர் சுப்மன் கில் களத்தடுப்பைத் தேர்வு செய்தார். குஜராத் அணியில் வாஷிங்டன் சுந்தருக்குப் பதில் அர்ஷத் கான் சேர்க்கப்பட்டார்.

### ஜாக்ஸ் அரைச்சதம்

மும்பை அணிக்கு ரோகித் சர்மா, ரிக்கிள்டன் ஜோடி ஆரம்பம் கொடுத்தது. முதல் ஓவரை மொஹமட் சிராஜ் வீசினார். முதல் பந்தில் 2 ஓட்டங்கள் எடுத்த ரிக்கிள்டன், அடுத்த பந்தில் சுதர்சனிடம் பிடி கொடுத்தார். ரோகித் சர்மா 7 ஓட்டங்கள் மட்டும் எடுத்து அர்ஷத் கான் பந்தில் ஆட்டமிழந்தார்.

பிரசித் கிருஷ்ணா வீசிய 5வது ஓவரில் சூர்யகுமார் 3 பவுண்டரிகள் அடிக்க, மொத்தம் 16 ஓட்டங்கள் எடுக்கப்பட்டன. இதன்பின் அணியின் ஓட்ட வேகம் குறைந்தது. 10 ஓவரில் மும்பை அணி 89 ஓட்டங்களை எடுத்திருந்தது. இந்நிலையில் சாய் கிஷோர் வீசிய 11வது ஓவரில் சிக்சர் அடித்த ஜாக்ஸ் அரைச்சதம் கடந்தார். இதே ஓவரில் சூர்யகுமார் (34) ஆட்டமிழந்தார். மறுபக்கம் பந்தை சுழற்றிய ரஷித் கான், ஜாக்சை (53) ஆட்டமிழக்கச் செய்தார்.

மீண்டும் வந்த சாய் கிஷோர், இம்முறை அணித் தலைவர் ஹர்திக் பாண்ட்யாவை (1) அவுட்டாக்க, மும்பை அணி 106 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுகளை இழந்து திணறியது. திலக் வர்மா 7 ஓட்டங்கள் மட்டும் எடுத்தார்.

20 ஓவர்கள் நிறைவில் மும்பை அணி 8 விக்கெட்டுக்களை இழந்து 155 ஓட்டங்களை எடுத்தது. தீபக் சஹார் (8), கரண் சர்மா (1) ஆட்ட மிழக்காமல் இருந்தனர்.

### ஏமாற்றிய ஆரம்பம்

குஜராத் அணிக்கு சுப்மன் கில், சாய் சுதர்சன் ஜோடி ஆரம்பம் கொடுத்தது. தீபக் சஹார் வீசிய முதல் ஓவரில் பவுண்டரி அடித்த சுதர்சன் (5), டிரன்ட் பவுல்ட் பந்தில் ஆட்டமிழந்தார். வழக்கத்துக்கு மாறாக சுப்மன் (முதல் 20 பந்துகளில் 11 ஓட்.,) நிதான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். குஜராத் அணி 5 ஓவர்களில் 21/1 ஓட்டங்கள் மட்டும் எடுத்தது. 2ஆவது விக்கெட்டுக்காக 72 ஓட்டங்களைச் சேர்த்த போது, பட்லர் (30) ஆட்டமிழந்தார். அடுத்து வந்த ரூதர்போர்ட் 2 சிக்சர் அடிக்க, 14 ஓவரில் குஜராத் அணி 107/2 ஓட்டங்கள் எடுத்து, வலுவான நிலையில் இருந்தது.

### பும்ரா திருப்பம்

பின் மழை காரணமாக 15 நிமிடம் போட்டி நிறுத்தப்பட்டது. மீண்டும் தொடங்கியதும் வேகத்தில் மிரட்டினார் பும்ரா. இவரது பந்தில் சுப்மன் (43) போல்டானார். பவுல்ட் பந்தில் ரூதர்போர்ட் (28) ஆட்டமிழந்தார். மறுபடியும் வந்த பும்ரா, ஷாருக்கானை (6) போல்டாக்கினார். மீண்டும் மழை குறுக்கிட, இம்முறை குஜராத் 18 ஓவரில் 132/6 ஓட்.,எடுத்திருந்தது.

37 நிமிடத்துக்குப் பின் ஆட்டம் ஆரம்பித்தது. 19 ஓவரில் 147 ஓட்டங்கள் என இலக்கு மாற்றப்பட்டது. இதனால் கடைசி 6 பந்தில் குஜராத் வெற்றிக்கு 15 ஓட்டங்கள் தேவைப்பட்டன.

### "திரில்" வெற்றி

தீபக் சஹார் பந்து வீசினார். முதல் இரு பந்தில் டிவாட்டியா 5 ஓட்டங்கள் (4, 1) எடுத்தார். 3வது பந்தில் கோயட்சீ, சிக்சர் (6) அடிக்க, கடைசி 3 பந்துகளில் 4 ஓட்டங்கள் மட்டும் தேவைப்பட்டன. 4வது பந்தை சஹார் "நோ பாலாக" வீச, 2 ஓட்., (1+1) கிடைத்தன.

மீண்டும் வீசப்பட்ட 4வது பந்தில் டிவாட்டியா ஒரு ஓட்டம் எடுத்தார். 1 ஓட்டம் எடுத்தால் வெற்றி என்ற நிலையில், 5வது பந்தை தேவையில்லாமல் உயரமாக அடித்து ஆட்டமிழந்தார் கோயட்சீ (12). கடைசி பந்தில் அர்ஷத் ஒரு ஓட்டம் எடுக்க, குஜராத் அணி 19 ஓவர்களில் 147 ஓட்டங்கள் எடுத்து வென்றது. தொடர்ச்சியாக 6 போட்டியில் வென்ற மும்பை அணிக்கு, இம்முறை அதிர்ஷ்டம் இல்லாமல் போக, கடைசி பந்தில் வீழ்ந்தது. (ம-7,4)

# பிளே-ஓப் சுற்றுக்கு முன்னேறப் போவது யார்?

ஐபிஎல் தொடர் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ள நிலையில், பிளே-ஓப் சுற்றுக்கு முன்னேறப் போகும் என்ற பரபரப்பு அதிகரித்துள்ளது.

நடப்பு ஐ.பி.எல் தொடரில் அனைத்து அணிகளும் தலா 10 இற்கும் மேற்பட்ட போட்டிகளில் விளையாடியிருந்தாலும் இன்னும் அடுத்த சுற்றான பிளே ஓப் சுற்றுக்கு தகுதி பெறாமல் இருக்கின்றன. இருப்பினும், சென்னை, ராஜஸ்தான், ஹைதராபாத் அணிகள் வெளியேறி விட்டன.

11 போட்டிகளில் விளையாடி 8 வெற்றிகளுடன் 16 புள்ளிகளுடன் முதலிடத்தில் இருக்கும் பெங்களூர், 2 போட்டிகளில் வெற்றிபெற்றால் முதலிடத்திலோ அல்லது குறைவாக வெற்றி பெற்றால் 2 ஆவது இடத்தைப் பிடிக்கும்.

லக்னோவுக்கு எதிரான வெற்றியின் மூலம் பஞ்சாப் அணி, வெற்றிப் பாதைக்கு திரும்பியுள்ளதால் அதே வேகத்தில் பிளே-ஓப் சுற்றுக்கு செல்லும் முனைப்பில் இருக்கிறது. நல்ல ரன்ரேட் இருப்பதால் இன்னும் ஒரு வெற்றி பெற்றால் பஞ்சாப் அணி பிளே-ஓப்புக்கு தகுதி பெற்றுவிடும். 11 போட்டிகளில் விளையாடி 7 வெற்றிகளுடன் 15 புள்ளிகளுடன் 2 ஆவது இடத்தில் உள்ளது.

முதலில் தோல்வியைச் சந்தித்தாலும் தொடர்ச்சியாக 6 போட்டிகளில் வென்ற மும்பை 11 போட்டிகளில் விளையாடி 14 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்தில் இருக்கிறது. பிளே- ஓப் ரேஸில் நீடிக்க வேண்டுமானால், மீதமுள்ள 3 போட்டிகளில் 2 இல் கட்டாயம் வென்றாக வேண்டும்.

10 போட்டிகளில் விளையாடியுள்ள 14 புள்ளிகளுடன் உள்ள குஜராத் மீதமுள்ள 4 போட்டிகளில் 2 இல் வெற்றி பெற்றால் முதல் 4 இடங்களைப் பிடிக்கும்.

முதல் 4 போட்டிகளில் வெற்றிபெற்று கம்பீரமாக வலம்வந்த டில்லி அணி, மும்பைக்கு எதிரான தோல்வியின் மூலம் அடுத்தடுத்து தோல்வியைத் தழுவி வருகிறது. ஹைதராபாத்துக்கு எதிரான போட்டி முடிவில்லாமல் போன நிலையில், மீதமுள்ள மூன்று போட்டிகளில் 2 இல் வென்றாகும் கட்டாயத்தில் உள்ளது.

14 புள்ளிகளுடன் இருக்கும் கொல்கத்தா மீதமிருக்கும் போட்டிகளில் வென்றால் 17 புள்ளிகளைப் பெறும். இருந்தாலும் கொல்கத்தாவின் மிகவும் குறைவான ரன் ரேட் அந்த அணிக்கு பின்னடைவாக உள்ளது.

11 போட்டிகளில் விளையாடி 5 வெற்றிகளுடன் 10 புள்ளிகளுடன் இருக்கும் லக்னோ இன்னும் மீதமிருக்கும் 3 போட்டிகளில் வென்றாலும், 16 புள்ளிகளுடன் மற்ற போட்டிகளின் முடிவுக்காக காத்திருக்க வேண்டும்.

பிளே-ஓப் ரேஸில் இருக்கும் அனைத்து அணிகளும் வெற்றிபெற வேண்டிய கட்டாயத்தில் இருந்தாலும், வெளியேறிய அணிகள் அவர்களைத் தோற்கடித்து அவர்களின் பிளே-ஓப் கனவைத் தகர்க்கும் முனைப்பில் இருப்பதால் போட்டிகள் பரபரப்புக்குப் பஞ்சமிருக்காது. (6-8)




# சிராஜுக்கு பிசிசிஐ சார்பில் வைர மோதிரம் அணிவித்த ரோஹித்

ஐசிசிரி-20 உலக கோப்பை தொடரில் சிறப்பாக விளையாடிய முகமது சிராஜுக்கு பிசிசிஐ சார்பில் இந்திய அணி கப்டன் ரோஹித் சர்மா வைர மோதிரத்தை அணிவித்து பாராட்டு தெரிவித்தார்.

கடந்த ஆண்டு அமெரிக்கா மற்றும் கரீபியனில் நடைபெற்ற ரி-20 போட்டியில் சிறப்பாக விளையாடிய இந்திய அணி 2 ஆவது முறையாக கோப்பையை வென்று அசத்தியது. கோப்பையை வென்று இந்திய அணியின் வெற்றிக்கு பங்களித்ததற்காக இந்திய கப்டன் ரோஹித் சர்மா உட்பட இந்திய வீரர்கள் அனைவருக்கும் கடந்த ஆண்டு நாமன் விருதுகளில் வைர மோதிரம் பிசிசிஐ சார்பில் பரிசாக அளிக்கப்பட்டது.

முகமது சிராஜ் தனது ரி-20 உலகக் கோப்பையில், இந்தியா விளையாடிய போட்டிகளில் முக்கிய பங்கு வகித்தார். பரிசளிப்பு நிகழ்வின் போது



இந்திய வேகப்பந்து வீச்சாளர் முகமது சிராஜ் கலந்துகொள்ளவில்லை.

நடப்பு ஐபிஎல் தொடரில் குஜராத்தின் அகமதாபாத்தில் நேற்று போட்டியில் மும்பை மற்றும் குஜராத் அணிகள் மோதியிருந்தன. இதில் மும்பையின் ரோஹித் சர்மா மற்றும் குஜராத் வீரர் முகமது சிராஜ் இருவரும் சந்தித்துக் கொண்டனர். அப்போது அவரை கௌரவிக்கும் விதமாக அவருக்கு இந்திய அணி கப்டன் ரோஹித் சர்மா அணிவித்தார். (6-8)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வடமாகாணத்தில் 1938 இற்கு முன்னர் இருந்த உடையார் பிரிவுகளும், 1921 இல் இப் பிரிவுகள் கொண்டிருந்த குடித்தொகையும்



இலங்கையில் பொது நிர்வாகம் 1938ற்கு முன்னர் ஐந்து அடுக்கு படிமுறைகளைக் கொண்டிருந்தது. அவையாவன: மாகாணம் (அரசாங்க அதிபர்), மாவட்டம் (உதவி அரசாங்க அதிபர், மணியார் பிரிவு- மணியகாரன் - Superior Headman ), உடையார் பிரிவு (உடையார் - Chief Headman), கிராமத் தலைக்காரர் பிரிவு (விதானையார் -Village Headman). இவைகளுள் மணியகாரர், உடையார், விதானைமார் அவ்வவ் பகுதிகளில் நிலவுடமைகொண்ட வசதியான மற்றும் தங்களுக்கு விசுவாசமானவர்களை அரசு நியமித்து வந்தது. இம்முறை நீண்ட வரலாற்றைக்கொண்டது. யாழ்ப்பாண அரசர் காலத்திலும் அதன்பின்னர் போத்துக்கீசர், ஒல்லாந்தர் ஆட்சிக் காலங்களிலும் இத்தகைய முறையே இருந்து வந்தது.

அந்நிய ஆட்சியாளர்கள் நிர்வாக முறையை மாற்றாது தங்களுக்கு விசுவாசமானவர்களை நியமித்து வந்தனர்.

1931 இல் டொனமூர் அரசியல் யாப்பின் பிரகாரம் உருவாக்கப்பட்ட சட்டசபையில்தொகுதிவாரியாக தெரிவுசெய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகளே அதிகமாக இருந்ததுடன் நாட்டின் நிர்வாகத்தில் கூடுதலான உள்ளக சுயாட்சியைப் பெற்றிருந்தனர்.

சட்டசபையினர் நாட்டின் பொது நிர்வாகத்திலும் மானிய முறை கட்டமைப்பை நீக்கும் முகமாக மணியகாரர், உடையார் முறைகளில் மாற்றம் கொண்டுவந்தனர். மணியகாரர் முறையை ஒழித்து இதற்குப் பதிலாக பிரிவு வருமான அதிகாரி (DRO) பதவியை உருவாக்கினர்.

மேலும் இப்பதவிகளுக்கான அதிகாரிகளை பொதுப் பரீட்சை மூலம் தெரிவுசெய்யும் முறை அறிமுகப்படுத்தப்பட்டது.

உடையார் பதவி 1938 இல் முற்றாக ஒழிக்கப்பட்டது. உடையார்,கிராமத்தலைக்காரரிலும் பார்க்க கூடிய அதிகாரம் கொண்டவராகவும், சட்டம் ஒழுங்கு விடயங்களில் குறிப்பிடத் தக்க பொறுப்புக்களை வகித்தார்.

உடையார் பிரிவுகள் இன்று நாட்டில் இல்லாதபொழுதும், முன்னர் இருந்த உடையார் பிரிவுகளை அபிவிருத்திச் செயற்பாட்டிற்கு பயன்படுத்தலாம். இன்றைய கிராம நிலதாரி பிரிவுகள் பரப்பிலும், குடித்தொகையிலும் சிறியனவாக இருப்பதால் அபிவிருத்தி செயற்பாடுகளுக்கு ஏற்றதாக இல்லை. முன்னைய உடையார் பிரிவுகள் தற்போதைய பிரதேச செயலகப் பிரிவுகளுள் உபதிட்டமிடல், அபிவிருத்திப் பிரதேசமாகப் பயன்படுத்த முடியும். இப்பிரிவுகளின் புவியியல், மற்றும் சமூக - பொருளாதார நிலைகளில் தனித்தன்மை கொண்டதாகவுள்ளன.

அட்டவணை ஐ இல் வடமாகாணத்தில் இருந்த உடையார் பிரிவுகளின் விபரங்களும், 1924 இல் இவைகள் கொண்டிருந்த குடித்தொகை விபரங்களும் தரப்பட்டுள்ளன.

அட்டவணை I

| உடையார் பிரிவு | 1921இல் குடித்தொகை |
|---|---|
| நெடுந்தீவு | 4051 |
| புங்குடுதீவு மேற்கு | 2493 |
| புங்குடுதீவு கிழக்கு | 2695 |
| நயினாதீவு | 1722 |
| அனலைதீவு | 2042 |
| காரைதீவு | 9337 |
| கரம்பன் | 3990 |
| சரவணை | 4669 |
| வேலணை | 4145 |
| அல்லைப்பிட்டி | 2898 |
| யாழ்ப்பாணம்<br>நல்லூர்<br>அரியாலை<br>வண்ணார்பண்ணை | 47018 |
| கொக்குவில் | 9792 |
| நவாலி | 7929 |
| மானிப்பாய் | 5881 |
| வட்டுக்கோட்டை | 6975 |
| அராலி | 4575 |
| சங்கானை | 14567 |
| பண்டத்தரிப்பு | 9597 |
| உடுவில் | 13747 |
| மல்லாகம் | 13946 |
| தெல்லிப்பளை | 10475 |
| வீமன்காமம் | 4734 |
| மயிலிட்டி | 8802 |
| அச்சுவேலி | 7186 |
| புத்தூர் | 6832 |
| நீர்வேலி | 7259 |
| கோப்பாய் | 6343 |
| நாவற்குளி | 6167 |
| சாவகச்சேரி | 923 |
| மட்டுவில் | 5959 |
| மிருசுவில் | 2158 |
| வரணி | 6372 |
| உடுப்பிட்டி | 1435 |
| வல்வெட்டித்துறை | 5276 |
| கட்டைவேலி | 20759 |
| புலோலி | 6165 |
| பருத்தித்துறை | 8121 |
| முள்ளிப்பற்று | 5566 |
| புலோப்பளை | 2439 |
| தம்பன்காமம் | 651 |
| முகமாலை | 984 |
| பரந்தன் | 2168 |
| கண்டாவளை | 974 |
| துணுக்காய் | 360 |
| கள்ளக்குறிச்சி | 1665 |
| செட்டியாகுறிச்சி | 2694 |
| பல்லவராயன்கட்டு | 1026 |
| இலுப்பைக்கடவை | 952 |
| பனங்காமம் | 375 |
| மேற்குமூலை | 381 |
| பெருங்காலிப்பற்று | 1444 |
| மாந்தை வடக்கு | 2111 |
| மாந்தை தெற்கு | 2139 |
| மன்னார் கிழக்கு | 7651 |
| மன்னார் மேற்கு | 2370 |
| நானாட்டான் மேற்கு | 3019 |
| நானாட்டான் கிழக்கு | 1413 |
| முசலி வடக்கு | 1529 |
| முசலி தெற்கு | 1572 |
| சின்னா செட்டிகுளம் மேற்கு | 575 |
| சின்னா செட்டிகுளம் | 932 |
| கிழக்கு மூலை மேற்கு | 2234 |
| நடுச்செட்டிகுளம் | 1136 |
| கிழக்கு மூலை வடக்கு | 920 |
| மேல்பற்று கிழக்கு | 1262 |
| மேல்பற்றும் உடையாவூரும் | 257 |
| கருகாவல்பற்று தெற்கு | 322 |
| மேல்பற்று வடக்கு | 938 |
| கிழக்கு மூலை வடக்கு | 904 |
| சின்னா செட்டிகுளம் கிழக்கும் மேற்கும் | 484 |
| கிழக்கு மூலை தெற்கு | 1611 |
| முள்ளியவளை | 1480 |
| கரிகாட்டு மூலை வடக்கு | 3421 |
| கரிகாட்டு மூலை தெற்கு | 1378 |
| புதுக்குடியிருப்பு | 1423 |

1921 இல் வடக்கு மாகாணத்தில் 80 உடையார் பிரிவுகள் இருந்தன. இன்று இப்பிரிவுகள் இல்லை. வடக்கு மாகாணத்தில் தற்பொழுது 34 பிரதேச செயலகப் பிரிவுகளும் 1041 கிராம நிலதாரி பிரிவுகள் இருக்கின்றன.

பிரதேச செயலகப் பிரிவுக்கும், கிராம நிலதாரி பிரிவுக்கும் இடைப்பட்ட நிலையில் முன்னர் இருந்த உடையார் பிரிவுகள் அடிப்படையில் அபிவிருத்தி செயற்பாடுகள் முன்னெடுக்க முடியும்.

மேற்குறிப்பிட்ட முன்னைய உடையார் பிரிவுகளுடன் இன்றைய குடிப்பரப்பில் அபிவிருத்தி நிலைக்கேற்ப புதிய பிரிவுகளும் உருவாக்கப்பட வேண்டும். கிளிநொச்சி, அக்கராயன், தர்மபுரம், கல்மடு, கௌதாரிமுனை, முழங்காவில்,மாங்குளம் போன்றனவற்றைக் குறிப்பிடலாம்.

**பேராசிரியர்.பொ.பாலசுந்தரம்பிள்ளை**
**வாழ்நாள் பேராசிரியர்,**
**முன்னாள் துணைவேந்தர்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

# இராசிபலன்

07.05.2025
சித்திரை 24, புதன்கிழமை
தசமி பிற்பகல் 1.54 மணிவரை

பூரம் முன்னிரவு 9.21 மணிவரை
சுபநேரம் 4.25- 5.55 மணிவரை
இராகுகாலம் 11.55-1.25 மணிவரை

சந்திராஷ்டமம்-
திருவோணம்,அவிட்டம்.

**வளவன்**


மேஷம்


பிறர் நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், சுய முயற்சியின் மூலம் சுகம் காணும் நாள், வருங்கால நலன்கருதி சேமிக்க முற்படுவீர்கள், வழிபாடு ஆனந்தம் தரும்.


கடகம்


குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம்.


துலாம்


மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம் பெறலாம், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், ஆடம்பரப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.


மகரம்


உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், எந்தக் காரியத்தையும் ஒரு முறைக்கு பலமுறை யோசித்துச் செய்வது நல்லது.


ரிஷபம்


எந்தக் காரியத்தையும் எளிதில் செய்து முடிப்பீர்கள், பணிபுரியும் இடத்தில் பெயரும், புகழும் கூடும், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம்.


சிம்மம்


கற்பனை மிகுதியான நாள் வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், குடும்பத்தில் சுமைகூடும் பொறுப்புக்களும் வந்து சேரலாம், திடீர் பயணங்கள் கைகூடும்.


விருச்சிகம்


உறவினர்கள் உங்கள் இல்லம் தேடி வரலாம், பொது நல ஈடுபாட்டில் ஆர்வம் கூடும், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள்.


கும்பம்


குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, தொழில் வாய்ப்புக்கள் தேடி வரலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படலாம்.


மிதுனம்


பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், வம்பு வழக்குகளைச் சமாளித்து வளம் காணும் நாள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.


கன்னி

வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், குடும்பத்தினரை அனுசரித்து செல்வது நல்லது, தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், சுப விரயங்கள் மேலோங்கும் நாள்.


தனுசு

மருத்துவச் செலவுகள் குறைந்து மன நிம்மதி கிடைக்கும், எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம்மாறுவர், தொழில் நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.


மீனம்

உங்களின் திறமைகள் வெளிப்படும் நாள், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, உற்சாகமான நாள்.

**ஆர்வம் என்றும் பரிசை அனைவருக்கும் வழங்கு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்குச் சாவடிகளுக்கு நேரில் சென்று நிலைமைகளை அவதானித்த அரச அதிபர்



(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சிமன்ற தேர்தல்களின் வாக்களிப்பு நேற்றைய தினம் அமைதியான முறையில் நடைபெற்றது.

அதன்போது வாக்களிப்பு நிலையங்களுக்கு மாவட்ட செயலரும், தெரிவத்தாட்சி அலுவலருமான மருதலிங்கம் பிரதீபன் நேரில் சென்று நிலைமைகளை அவதானித்தார். (நி-8)

# தபால் மூல வாக்குகள் தனியாக எண்ணப்படமாட்டாது

## வெளியான அறிவிப்பு

(கொழும்பு)

முன்னைய தேர்தல்கள் போன்று இம்முறை உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தபால் மூல வாக்குகள் தனியாக எண்ணப்பட மாட்டாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அதற்குப் பதிலாக வாக்குப் பெட்டிகளுடன் சேர்த்து அந்தந்த வாக்குச் சாவடிகளுக்கான தபால் வாக்குகளும் வாக்குச் சாவடி பொறுப்பதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அதன்காரணமாகஒவ்வெரு உள்ளூராட்சி மன்றத்துக்குமான மொத்த வாக்குகளின் எண்ணிக்கையே இம் முறை அறிவிக்கப்படவுள்ளது. (நி-8)



கண்பார்வையற்றோருக்கான அறக்கட்டளை நிலையத்தால் மாற்றுத்திறனாளிகள் தின மாபெரும் அதிஷ்ட இலாபச் சீட்டிழுப்பு வருடாந்தம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. 2025 ஆம் ஆண்டுக்கான சீட்டிழுப்பின் முதலாவது சீட்டை வடக்கு மாகாண ஆளுநர் நேற்று சம்பிரதாயபூர்வமாகப் பெற்றுக்கொண்டு ஆரம்பித்து வைத்தார்.

# நான்கு மாதங்களுக்குள் 42 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள்

(கொழும்பு)

**கடந்த நான்கு மாத காலப்பகுதிக்குள் இலங்கையில் 42 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.**

ஜனவரி மாதம் தொடக்கம் ஏப்ரல் மாதம் வரை இலங்கையின் பல்வேறு பிரதேசங்களில் இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

மேற்குறித்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் காரணமாக தற்போதைக்கு 29 பேர் வரை உயிரிழந்துள்ளனர்.

அதேநேரம் காயமடைந்தவர்களில் சிலர் இன்னும் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மேற்குறித்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் ஒரேயொரு சம்பவத்தில் மட்டும் எந்தவொரு நபரும் பலியாகவோ, எவருக்கும் காயம் ஏற்படவோ இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. (நி-8)

# நாடு திரும்பியதும் தாமதிக்காது வாக்களித்தார் ஜனாதிபதி அநுர

(கொழும்பு)


வியட்நாமில் இருந்து நாடு திரும்பிய ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வாக்களித்தார்.

நாடு திரும்பிய சிறிது நேரத்திலேயே தனது குடியுரிமையை நிறைவேற்றினார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மூன்று நாள் வியட்நாம் விஜயத்தை முடித்துக் கொண்டு நேற்றுப் பிற்பகல் இலங்கை வந்தடைந்ததாக கட்டுநாயக்க விமான நிலையத்தின் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

அவருடன் 5 பேர் இந்த விஜயத்தில் பங்கெடுத்திருந்தனர்.

வியட்நாம் அரசாங்கத்திற்கு சொந்தமான விசேட விமானம் மூலமாக இவர்கள் நேற்று பிற்பகல் 01.25 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர். (நி-8)




# வாக்களித்தார் சஜித்

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவும் சற்று முன்னர் வாக்களித்துள்ளார்.

அவரது மனைவி ஜலனி பிரேமதாசவும் ராஜ கிரிய பிரதேசத்தில் உள்ள கொடுவேகொடவிவே காராம விகாரையின் சந்திரரத்ன பாலர் பாடசாலை மண்டபத்தில் அமைந்துள்ள வாக்குச் சாவடியில் அவர்கள் தங்கள் வாக்கைப் பதிவு செய்திருந்தனர். (நி-8)




**பச்சிலைப்பள்ளி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், பளை (வ-து)**
**கெண்டனர் பெட்டிகள் மூன்றினை விற்பனை செய்வதற்கான மூடிய கூறுவிலை கோரல்**

- பச்சிலைப்பள்ளி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு சொந்தமான மூன்று கெண்டனர் பெட்டிகள் மூடிய கூறுவிலைகள் மூலம் விற்பனை செய்யப் படவுள்ளன.
- மேற்கூறிய கெண்டனர் பெட்டிகளை 07.05.2025 - 21.05.2025 வரை காலை 9.00 மணி தொடக்கம் மாலை 4.00 மணி வரை சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தில் தொடர்பு கொண்டு பார்வையிட முடியும்.
- இம் மூடிய கூறுவிலைக்கான விண்ணப்பங்கள் 23.05.2025 ஆம் திகதி பி.ப 2.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்றைய தினம் பி.ப 2.30 மணிக்கு திறக்கப்படும்.
- கெண்டனர் பெட்டியை கொள்வனவு செய்ய விரும்புபவர்கள் மீளளிக்கப்படாத வைப்புத் தொகையாக ரூபா 1000.00 இனைச் தலைமைக் காரியாலயத்தில் செலுத்தி பற்றுச்சீட்டின் நிழற்பிரதியை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.
- விண்ணப்ப படிவத்தில் 1.முழுப்பெயர் 2.தொலைபேசி இலக்கம் 3.தேசிய அடையாள அட்டை இலக்கம் 4.நிரந்தர முகவரி 5.ஆகக்கூடிய கேள்வித் தொகை (தனித்தனியாக)
என்பவற்றை உள்ளடக்கி நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமோ அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பத்தின் இடது பக்க மேல் மூலையில் "கெண்டனர் பெட்டி விற்பனை" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.
- இக் கெண்டனர் பெட்டிகள் விற்பனை தொடர்பில் சங்கத்தின் இயக்குனர் சபை தீர்மானமே இறுதியானதாகும்.

(சி-2906)

தலைவர்,
பச்சிலைப்பள்ளி ப.நோ.கூ.சங்கம்,
பளை.

தொ.இல. 021 205 0028



**யாழ்.உற்பத்தி பொருட்கள் தேவை**

வெள்ளவத்தை, தெஹிவளைக்கு இடையில் புதிதாக திறக்கப்பட விருக்கும் சுப்பர் மார்க்கட்டுக்கு யாழ்.கிளிநொச்சி, வவுனியா இடங்களைச் சேர்ந்த தரமான உள்ளூர் உற்பத்தி பொருட்கள் தேவை.

தொடர்பு: 076 544 2220 075 576 2220


(சி-142)



**கண்ணீர் அஞ்சலி**

எமது கல்லூரியின் ஆசிரியை
திருமதி. தவச்செல்வி நவகாந்தன்
அவர்களின் அன்புத் தாயார்...

திருமதி.
**சிவநாச்சியார் சுப்பிரமணியம்**



அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக்கழகம்
யா/கொக்குவில் இந்துக்கல்லூரி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெடிமருந்துக் களஞ்சியம் உடைக்கப்பட்டு திருட்டு

(கொழும்பு)

அம்பாறையில் அமைந்துள்ள வெடிமருந்துக் களஞ்சியம் ஒன்று உடைக்கப்பட்டு பாரியளவு வெடி பொருட்கள் திருடப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரித்துள்ளனர்.

அம்பாறையின் தமனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அலஹேன கிராமத்தில் அமைந்திருந்த வெடி மருந்துக் களஞ்சியமே உடைக்கப்பட்டு, அங்கிருந்த பாரியளவான வெடிபொருட்கள் திருடப்பட்டுள்ளது.

அம்பாறை பிரதேசத்தின் கல் குவாரி உரிமையாளர்களின் வெடி பொருட்கள் இங்கு களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன.

வெடிபொருள் களஞ்சிய அறையின் ஒரு சாவி அதன் உரிமையாளரிடமும் இன்னொன்று தமனை பொலிஸ் நிலையத்திலும் வைக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் வெடிபொருள் களஞ்சியசாலையின் மூன்று பூட்டுக்கள் உடைக்கப்பட்டு அங்கிருந்த வெடி பொருட்கள் களவாடப்பட்டுள்ளது.

45 கிலோ எடைகொண்ட ஜெல் குச்சிகள், 10 மீற்றர் நீளமான இணைப்பு நூல், 25 சுருள்கள் மற்றும் 4100 டெடனேற்றர்கள் என்பன இவ்வாறு திருடப்பட்டுள்ளன.

சம்பவம் குறித்து தற்போது பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (6-8)



வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தால் அமைக்கப்பட்ட கொடிகாமம் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தின் நவீன போத்தல் கள் அடைப்பு நிலையை திறப்பு விழா கடந்த மாதம் 30 ஆம் திகதி வரணி, நாவற்காட்டில் அமைந்துள்ள கூட்டுறவுச் சங்கத்தின் நிலையத்தில் நடைபெற்றது.

நிலையத்துக்கான நினைவுக்கல் ஆளுநர், பிரதம செயலர் ஆகியோரால் திறந்து வைக்கப்பட்ட பின்னர் நிலையம் நாடா வெட்டி திறந்து வைக்கப்பட்டது.

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 500 | 500 | 300 | 400 | 450 |
| உருளைக்கிழங்கு | 220 | 220 | 200 | 190 | 240 |
| பச்சைமிளகாய் | 160 | 160 | 200 | 150 | 250 |
| தக்காளி | 950 | 900 | 1000 | 900 | 1000 |
| மரவள்ளிக்கிழங்கு | 280 | 300 | 300 | 250 | 200 |
| கோவா | 450 | 450 | 500 | 330 | 500 |
| கரட் | 800 | 900 | 1200 | 1000 | 1000 |
| பூசணி | 200 | 220 | 270 | 200 | 250 |
| புடோல் | 200 | 250 | 150 | 300 | 300 |
| வாழைக்காய் | 100 | 100 | 80 | 70 | 150 |
| சின்ன வெங்காயம் | 300 | 100-300 | 250 | 120-300 | 350 |
| பெரிய வெங்காயம் | 120 | 140 | 130 | 100 | 120 |
| பாகற்காய் | 600 | 700 | 500 | 450 | 600 |
| வெண்டக்காய் | 300 | 250 | 200 | 250 | 500 |
| கருணைக் கிழங்கு | 350 | 350 | 250 | 250 | 350 |
| பயற்றங்காய் | 450 | 400 | 350 | 300 | 400 |
| லீக்ஸ் | 300 | 300 | 350 | 220 | 400 |
| பீற்றூட் | 550 | 600 | 400 | 450 | 600 |
| கறிமிளகாய் | 600 | 500 | 400 | 450 | 600 |
| முருங்கைக்காய் | 1600 | 2500 | 2000 | 1500 | 2000 |
| போஞ்சி | 750 | 850 | 800 | 450 | 1000 |
| கத்தரிதம்புள்ள | 400 | 300 | 300 | -- | 400 |
| கீரை – 1 பிடி | 100 | 80-150 | 70 | 60 | 100 |
| தேசிக்காய் | 200 | 300 | 200 | 300 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 200 | 260 | 150 | 120-200 | 200-240 |
| இராசவள்ளி | 650 | 700 | 500 | 450 | 700 |
| வெங்காயப்பூ | -- | -- | 1200 | -- | 800 |
| முள்ளங்கி | 150 | 160 | 200 | 150 | 400 |
| பொன்னாங்காணி | 120 | 70 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 80 | 70 | 100 | 80 | 100 |
| ஈரப்பலா | 150 | -- | 100 | 100 | -- |

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3321

Search for people, places and things

**சந்தோஸ்**

அவள்: நெஞ்சு வலி என்று சொன்னியே எக்ஸ்ரே எடுத்தியாடா...



அவன்: எக்ஸ்ரே எடுத்தால் நீ தான் என் இதயத்தில் இருக்காய் என்று எல்லாருக்கும் தெரிஞ்சிடும் பேபி...

**அஸ்வினியா**

விதி விளையாடுது என்று சொன்னால்



ஸ்கோர் எவ்வளவு என்று கேட்கிறான் சேர்

**சுகந்தன்**

சண்டை போட்டால் பேச மாட்டாளே என கவலைப்படுபவன் காதலன்...



பேசினால் சண்டை வந்திடுமோ என பயப்படுபவன் கணவன்...

**கரினா**

இன்றைக்கு என் ராசி பலனுக்கு: தடங்கலாம்....



எனக்கு நீ 365 நாளும் வெற்றி என்று போட்டாலும் எனக்கு தடங்கல் தான்டா நடக்குது...

**லிதுர்சிகா**

கணவன்: ஏன்டி இங்க ஒருத்தன் நாயா கத்திக் கொண்டு இருக்கேன், இவ்வளவு நேரம் எங்கடி போனாய்?



மனைவி: உங்களுக்குத்தான் பிஸ்கட் வாங்க போயிருந்தேன்

**மிதுனா**

கையிருப்பு குறையும் போது தான் ஒரு பொருளின் அருமை தெரியும்..



வயது ஏற ஏறத்தான் வாழ்க்கையின் மதிப்பு புரியும்


நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாரதம்

## சீனாவில் திடீர் சூறாவளி 4 படகுகள் ஆற்றில் கவிழ்ந்ததில் 10 பேர் உயிரிழப்பு



(பீஜிங்)

தென்மேற்கு சீனாவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் திடீரென வீசிய சூறாவளியால் ஆற்றில் பயணித்துக் கொண்டிருந்த 4 சுற்றுலாப்படகுகள் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 10 பேர் உயிரிழந்ததோடு, 70 இற்கும் மேற்பட்டோர் மீட்கப்பட்டு வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருவதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சீனாவின் குசோயு மாகாணத்தில் உள்ள யாங்சி நதியின் துணை நதியான "வு" (Wu) ஆற்றில் நான்கு படகுகள் மூழ்கி விபத்துக்குள்ளான போது அப்படகுகளில் இருந்த 80 இற்கு மேற்பட்டோர் நீரில் விழுந்துள்ளனர்.

நீரில் விழுந்தவர்களில் 10 பேர் உயிரிழந்ததாகவும் ஏனையவர்கள் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகவும் வைத்தியசாலையில் சிகிச்சை பெறுபவர்களின் உயிருக்கு ஆபத்தில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஆற்றின் மேற்பரப்பில் ஆலங்கட்டி மழையுடனான பெரும் புயல் தாக்கியதாலேயே படகுகள் கவிழ்ந்ததாகவும் அந்நாட்டு ஊடகங்கள் குறிப்பிடுகின்றன. (நி-8)

## இந்தியா – பாகிஸ்தான் போர் மேகம்

## தீர்மானம் இன்றி நிறைவடைந்த ஐ.நா பாதுகாப்பு சபையின் கூட்டம்



(ஜெனீவா)

இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் அதிகரித்து வரும் போர் பதற்றங்களுக்கு மத்தியில், பாகிஸ்தானின் வேண்டுகோளின் பேரில் கூட்டப்பட்ட ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையின் மூடிய கதவு கூட்டம், எந்த அறிக்கையும், தீர்மானமும் அல்லது அதிகாரப்பூர்வ முடிவும் இல்லாமல் முடிந்தது.

இந்த விவாதத்தில் இருந்து குறிப்பிடத்தக்க பதில் எதுவும் வெளிவரவில்லை.

பல ஆண்டுகளில் நிலைமை மிகவும் கொந்தளிப்பான நிலையை எட்டியுள்ளதாக ஐ.நா பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டெரெஸ் எச்சரித்த சில மணி நேரங்களுக்குப் பின்னர் இந்த சந்திப்பு நடந்தது.

ஐக்கிய நாடுகள் சபைக்கான பாகிஸ்தானின் நிரந்தர பிரதிநிதி அசிம் இப்திகார் அகமட், இந்தியாவுக்கு எதிராக தவறான கூற்றுக்களைப் பரப்ப ஐ.நா. பாதுகாப்பு சபையின் தளத்தை மீண்டும் தவறாகப் பயன்படுத்தினார்.

26 பொதுமக்களைக் கொன்ற பஹல்காம் பயங்கரவாதத் தாக்குதலில் இருந்து கவனத்தைத் திசை திருப்பும் முயற்சியில், பாகிஸ்தான் காஷ்மீர் பிரச்சினையை எழுப்பியது.

இந்தியா இராணுவக் குவிப்பு மற்றும் ஆத்திரமூட்டும் அறிக்கைகளை வெளியிட்டதாக குற்றம் சாட்டியதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சிந்து நதி நீர் ஒப்பந்தத்தை இந்தியா அண்மையில் நிறுத்தி வைத்ததை "ஆக்கிரமிப்புச் செயல்" என்றும் அஹ்மத் குறிப்பிட்டார்.

இது எல்லை தாண்டிய பயங்கரவாதத்தை ஆதரிப்பதில் இஸ்லாமாபாத்தின் பங்கிலிருந்து உலகளாவிய கவனத்தைத் திசைதிருப்பும் ஒரு முயற்சியாக இந்தியா கருதுகிறது.

15 நாடுகளைக் கொண்ட சக்திவாய்ந்த பாதுகாப்பு சபையில் தற்போது நிரந்தரமற்ற உறுப்பினராக உள்ள பாகிஸ்தான், இந்தப் பிரச்சினையைத் தீர்க்க மூடிய ஆலோசனைகளைக் கோரியது.

மே மாதத்திற்கான சபையின் தலைவராக, கிரீஸ் மே 5 ஆம் திகதி மதியம் ஒரு மூடிய கதவு கூட்டத்தைத் திட்டமிட்டது.

2019 ஒகஸ்ட்டில் ஜம்மு மற்றும் காஷ்மீரின் சிறப்பு அந்தஸ்தை இரத்து செய்வதற்கான இந்தியாவின் நடவடிக்கை குறித்து விவாதிக்க சீனா ஐ.நா. பாதுகாப்பு சபையின் மூடிய ஆலோசனைகளைக் கோரியது.

அந்தக் கூட்டம் 15 நாடுகளைக் கொண்ட சக்திவாய்ந்த ஐ.நா. அமைப்பிலிருந்து எந்த முடிவும் அல்லது அறிக்கையும் இல்லாமல் முடிவடைந்தது.

இது பீஜிங்கின் ஆதரவுடன் காஷ்மீர் பிரச்சினையை சர்வதேச மயமாக்க பாகிஸ்தானின் முயற்சிகளுக்கு பெரும் அவமதிப்பை ஏற்படுத்தியது.

சபையில் பெரும்பான்மையானவர்கள் புதுடில்லிக்கும் இஸ்லாமாபாத்துக்கும் இடையிலான இருதரப்பு விடயம் என்று வலியுறுத்தினர். (நி-8)

## இந்திய... அதிக... அமெரி...

### (வோஷிங்டன்... இந்தியா - ப... ஆரம்பிக்கப்பட்... கடும் தாக்கத்... அமெரிக்காவின்... வெளியிட்டுள்ள...

நியூயோர்க்கை தலைமையிடமாக கொண்டு செயற்படும் மூடிஸ் நிறுவனம் இது குறித்து கூறியிருப்பதாவது:-

கடந்த ஆண்டு இந்தியாவின் ஒட்டுமொத்த ஏற்றுமதியில், பாகிஸ்தானுக்கு செய்யப்பட்ட ஏற்றுமதியின் பங்கு 0.5 சதவீதத்துக்கும் குறைவானது ஆகும். இந்தியா - பாகிஸ்தானுடன் பெரிய அளவிலான பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை.

இதன் காரணமாக, போர் பதற்றத்தால் இந்தியாவின்

பொ... பெ... இந்... துை... வே... இந்... பாதி... 2... இந்... சத... மதி... உ... நிதி...

## ஏமன் துறைமுகம் மீது இ...

(இஸ்ரேல்)

ஏமனின் ஹொடைடா துறைமுகத்தின் மீது நேற்று முன்தினம் திங்கட்கிழமை வான்வழித் தாக்குதல்களை நடத்தியதாக இஸ்ரேலிய இராணுவம் தெரிவித்துள்ளது.

இஸ்ரேலின் பிரதான விமான நிலையத்திற்கு அருகே ஈரானுடன் இணைந்த ஹவுதிகள் ஏவுகணையை ஏவிய ஒரு நாளுக்குப் பின்னர் இந்த தாக்குதல் வந்துள்ளது.

ஹொடைடா மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் உள்ள ஹவுதி பயங்கரவாத இலக்குகள் என்று அழைக்கப்பட்ட இடங்களைத் தாக்கியதாக இஸ்ரேலிய இராணுவம் ஒரு அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த தாக்குதல்களில் குறைந்தது ஒருவர் கொல்லப்பட்டதாகவும், 35 பேர் காயமடைந்ததாகவும் ஹவுதிகளால் நடத்தப்படும் சபா செய்தி நிறுவனம் சுகாதார அமைச்சகத்தை மேற்கோள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிநாடு

# யா - பாகிஸ்தான் போர் மூண்டால்
# க பாதிப்பு பாகிஸ்தானுக்கே!
## ரிக்காவின் மூடிஸ் நிறுவனம் தகவல்

**(டன்)**

**- பாகிஸ்தான் இடையே போர் பட்டால் அது பாகிஸ்தானில் கத்தை ஏற்படுத்தும் என பின் மூடிஸ் நிறுவனம் தகவல் ளது.**



பொருளாதார நடவடிக்கைகளில் பெரிய அளவில் பாதிப்பு இருக்காது. இந்தியா பாதுகாப்பாக இருக்கும்.

அதே நேரத்தில் பாதுகாப்புத் துறைக்கு அதிக செலவு செய்ய வேண்டிய நிலை ஏற்படும் பட்சத்தில் இந்தியாவின் நிதி நிலையில் சிறு பாதிப்பை ஏற்படுத்தும்.

2024-25 நிதியாண்டில் இந்தியாவின் பொருளாதாரம் 6.5 சதவீதம் வளர்ச்சி அடைந்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

நடப்பு நிதியாண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4.4 சதவீதம் நிதிப் பற்றாக்குறையை அரசாங்கம் இலக்காகக் கொண்டுள்ளது.

மேலும், 2025 நிதி ஆண்டில் 57.1 சதவீதமாக இருந்த கடன் - மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதத்தை 2031 நிதியாண்டில் 50 சதவீதமாகக் குறைப்பதையும், 2027 நிதி ஆண்டில் இருந்து வருடாந்திர கடன் இலக்கு கட்டமைப்பிற்கு மாற்றுவதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

மக்களின் வலுவான பொது முதலீடு மற்றும் மீள்தன்மை கொண்ட நுகர்வோர் தேவை ஆகியவை இந்தியாவை தொடர்ந்து வளர்ச்சிப் பாதையை நோக்கி பயணிக்க வைக்கின்றன.

ஆனால், போர் மூளும் அபாயம் ஏற்பட்டால் அது பாகிஸ்தானில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடும். பொருளாதார ஸ்திரத் தன்மையை அடைவதில் பாகிஸ்தான் பெரும் பின்னடைவை எதிர்கொள்ளும்.

தொடர்ச்சியான போர் பதற்ற நிலை பாகிஸ்தானின் வெளிப்புற நிதியுதவியைப் பெறுவதற்கான திறனைக் கட்டுப்படுத்தும்.

அதன் அந்நியச் செலாவணி இருப்புக்களை பெருமளவில் குறைக்கக் கூடும்.

இவ்வாறு அந்த நிறுவனம் கூறியுள்ளது (நி-8)

## து இஸ்ரேல் தாக்குதல்!

காட்டி தெரிவித்துள்ளது.

இரண்டு கப்பல்கள் தங்கள் சரக்குகளை இறக்கிக் கொண்டிருந்தபோது இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளன.

துறைமுகத்தில் போக்குவரத்து முற்றிலுமாக ஸ்தம்பித்து விட்டது என்று துறைமுக ஊழியர் ஒருவர் தெரிவித்தார்.

ஏமனுக்குப் பிறகு செங்கடலில் இரண்டாவது பெரிய துறைமுகம் இதுவாகும். (நி-8)



## பாகிஸ்தான் துறைமுகத்தில் துருக்கி போர்க் கப்பல்

(இஸ்லாமாபாத்)

பஹல்காம் தாக்குதலை தொடர்ந்து இந்தியா - பாகிஸ்தான் இடையே போர்ப் பதற்றம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

இந்தியா தாக்குதல் நடத்தினால் தங்களது பொருளாதாரம் மிக மிக படுபாதாளத்துக்கு சென்று விடும் என்று பாகிஸ்தான் தலைவர்கள் பயத்தில் உள்ளனர்.

இதனால் அணு ஆயுத தாக்குதல் நடத்துவோம் என்று பாகிஸ்தான் தலைவர்கள் இந்தியாவை மிரட்டிய படியே உள்ளனர். ஆனால் இந்தியா நேரடி போருக்கும், மறைமுக போருக்கும் தீவிரமாக தன்னை தயார்படுத்தி வருகிறது.

இதையடுத்து பாகிஸ்தான் வெளிநாடுகளிடம் ஆயுத உதவி கேட்டு கெஞ்சத் தொடங்கி இருக்கிறது.

தற்போது பாகிஸ்தான் வசம் 4 நாட்கள் போருக்கு தேவையான பீரங்கி குண்டுகள் மட்டுமே உள்ளன. எனவே போர் ஏற்பட்டு அது நீடிக்கும் பட்சத்தில் தங்களுக்கு பெரிய இழப்பு ஏற்படும் என்று பயப்படுகிறார்கள்.

இதை சமாளிப்பதற்காக துருக்கி நாட்டிடம் இராணுவ உதவி கேட்டு பாகிஸ்தான் மீண்டும் மீண்டும் கோரிக்கை விடுத்தது. இதையடுத்து துருக்கி நாடு தனது போர் கப்பல்களில் ஒன்றை பாகிஸ்தானுக்கு உதவ அனுப்பியது.




அந்த போர் கப்பல் தற்போது கராச்சி துறைமுகத்துக்கு வந்துள்ளது. அந்தத் துறைமுகத்தில் அந்த போர் கப்பல் தயார் நிலையில் நிறுத்தப்பட்டு இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே பிரதமர் மோடியை கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்திய விமானப் படை தளபதி மார்ஷல் ஏ.பி.சிங் சந்தித்து பேசினார். அப்போது அவர் நீண்ட தூரம் சென்று தாக்கும் ஆற்றல் கொண்ட ரஃபேல் விமானங்கள் தயார் நிலையில் வைத்து இருப்பதாக பிரதமரிடம் விளக்கிக் கூறினார்.

ஏற்கனவே கடற்படை தளபதி தினேஷ் திரிபாதி பிரதமரை சந்தித்து அரபிக் கடலில் உள்ள இந்திய போர் கப்பல்கள் பற்றி விளக்கி உள்ளார். இதன் மூலம் இந்திய கடற்படை கப்பல்களும், போர் விமானங்களும் தயார் நிலையில் இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதன் காரணமாக இந்தியா-பாகிஸ்தான் இடையே போர் பதற்றம் மேலும் அதிகரித்துள்ளது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைவர் சிறிசபாரத்தினத்தின் 39ஆவது நினைவேந்தல் தினத்தை முன்னிட்டு வவுனியா பொது வைத்தியசாலை இரத்த வங்கியில் நேற்று முன்தினம் இரத்ததான முகாம் இடம்பெற்றது.

இதில் 15இற்கும் மேற்பட்ட குருதிக்கொடையினர் கலந்து கொண்டு இரத்ததானம் வழங்கியிருந்தனர்.

படம் : வசந்தரூபன்


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1986-இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>தகைமை/தொழில்: BSc,Civil Engineer(UK)<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15409 | பிறப்பு: 1983-இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>உயரம்: 5'8"<br>கி.பா: 54<br>தகைமை/தொழில்: LLB,Lawyer<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: G/15417 |
| பிறப்பு: 1997-இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>உயரம்: 5'8"<br>8இல் செவ்<br>தகைமை/தொழில்-HND. மேற்பார்வையாளர்<br>எதிர்பார்ப்பு: அரச/தனியார் உத்தியோகம்<br>தொ.இ: B/15410 | பிறப்பு: 1996-இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>உயரம்: 5'5"<br>கி.பா: 17 1/2<br>தகைமை/தொழில்: BBA<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு<br>தொ.இ: G/15419 |
| பிறப்பு: 1991-இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா-44<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: QS (அயர்லாந்து)<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15411 | பிறப்பு: 1978-இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 6<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: Law, Master in Public Administration,DO<br>எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்<br>தொ.இ: G/15421 |
| பிறப்பு: 1989-இந்து<br>நட்சத்திரம்:மிருகசீரிடம்<br>1இல் சூரி. செவ்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: A/L,Germany<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15415 | பிறப்பு: 1995-இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 18<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில் - MBBS,Doctor<br>எதிர்பார்ப்பு: உயர்பதவி<br>தொ.இ: G/15423 |
| பிறப்பு: 1995-இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>1இல்செவ்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: HND,LDI<br>எதிர்பார்ப்பு: அரச தொழில்<br>தொ.இ: B/15418 | பிறப்பு: 1996-இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 35 1/4<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில் -MBBS, Doctor<br>எதிர்பார்ப்பு: Doctor, Engineer<br>தொ.இ: G/15427 |

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

தொடர்பு:- 021 720 1005, 076 097 3120

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை

விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை

பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# இன்று ஒரு தகவல் 368

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## உணவும் பயமும்

ஒரு ஊரிலே ஒரு ராஜா இருந்தார். கொடுங்கோல் ஆட்சி ராஜா. நிறைய தொந்தரவு செய்துகொண்டிருந்தார். அவர் ஒரு தடவை என்ன செய்தார் தெரியுமா? ஒரு தவறும் செய்யாத ஒரு இளைஞனைப் பிடித்து சிறையில் அடைத்துவிட்டார். அந்தப் பையனுடைய உறவினர்கள் எல்லோரும் ராஜாவிடம் சென்றார்கள். "அவன் ஒரு தவறும் செய்யவில்லை அவனை விடுதலை செய்யுங்கள்" என்று கெஞ்சிக் கேட்டார்கள். ராஜா யோசனை செய்தார். அந்த இளைஞனை கூட்டிட்டு வரச்சொன்னார். அவனைக் கொண்டு வந்து ராஜா முன்னால் நிறுத்தினார்கள். "இதோ பாருப்பா! உன்னை நான் விடுதலை செய்கிறேன். ஆனா ஒரு நிபந்தனை! அந்த நிபந்தனையை நீ நிறைவேற்றினால் உனக்கு விடுதலை!" அப்படி என்றார் ராஜா.

"சரி!" என்று ஒத்துக்கொண்டான் பையன்.

ராஜா நிபந்தனை என்ன என்பதைச் சொன்னார்.

"உன்னிடம் ஒரு செம்மறி ஆட்டைக் கொடுக்கப்போகிறேன். ஒரு மாதத்திற்கு அதற்குத் தேவையான தீனியையும் கொடுக்கப் போகிறேன். ஒரு மாதம் கழித்து அந்த ஆட்டை எடைப்போட்டு பார்ப்பேன்! அந்த ஆட்டின் எடை கொஞ்சம் கூட கூடியிருக்கக்கூடாது! எடை கூடியிருந்தால் உனக்கு விடுதலை கிடையாது! என்ன சொல்கிறாய் என்றார் ராஜா.

பையனுக்கு ஒன்றும் புரியவில்லை! பயமாகிப் போனது! குழம்பிக் கொண்டே நின்றுகொண்டிருந்தான்.

"சரி! ஒரு நாள் "நேரம்" தருகிறேன். நன்றாக யோசித்து நாளைக்கு உன் முடிவைச் சொல்லு!" என்றார் ராஜா. பையன் கவலையோடு வெளியே வந்தான். அங்கே ஒரு பெரியவர் நின்றுகொண்டிருந்தார் அவரிடம் இந்த விடயத்தைச் சொன்னான்.

ஒரு வழி சொல்லிக் கொடுத்தார் அந்தப் பெரியவர்.

அதைக் கேட்டதும் பையன் மறுபடியும் ராஜா முன்னாடி வந்து நின்றான் "உங்கள் நிபந்தனையை ஏற்றுக்கொள்கிறேன்" என்று சொன்னான். தீவனத்தையும் கொடுக்கும்படியாக உத்தரவு போட்டார் ராஜா. ஆட்டுக்குட்டியையும் ஒரு மாதத்திற்கு அதுக்கு வேண்டிய தீவனத்தையும் ராஜா கொடுத்தார்.

ஒரு மாதம் தினமும் தவறாமல் அந்தத் தீவனத்தை ஆட்டுக்குப் போட்டான். ஒரு மாதம் கழித்து அந்த ஆட்டை அரண்மனைக்கு கூட்டிக்கொண்டு வந்தான். ராஜா அதை எடை போட்டுப் பார்த்தார். எடை கூடவில்லை. அப்படியேதான் இருந்தது! உடனே போட்ட நிபந்தனைப்படி அந்த இளைஞனை விடுதலை செய்தார்.

சரி... ஆட்டுக்கு எடை கூடாமல் இருக்க அந்தப் பெரியவர் சொல்லிக்கொடுத்த யோசனை அது வேறு ஒன்றும் இல்லை.

அந்த ஆட்டுக்கு எதிரிலே, அது கண்ணில் படும்படி ஒரு ஓநாயைக்கட்டிப் போடச்சொன்னார். அவ்வளவு தான்!

ஆட்டுக்கு ஓநாய் பிறவிப்பகை!

ஓநாயைப் பார்த்தால் ஆடு நடுங்க ஆரம்பித்துவிடும். அவ்வளவு பயம்!

தினமும் அந்த ஆடு பயந்துகொண்டே தீனியை உண்டது. எடை கூடவே இல்லை! அதுதான் ரகசியம்!

இது சின்னப்பிள்ளைங்களுக்கான ஒரு கதை. இதிலிருந்து தெரிந்து கொள்ளவேண்டிய உண்மை என்னவென்றால் நாம் எல்லோரும் சாப்பிடும் போது மனதும் உடலும் அமைதியாக இருக்க வேண்டும். அப்போதுதான் அது உடம்பில் ஒட்டும்! அவசரத்திலும் பயத்திலும் சாப்பிட்டால் அது சரியாக ஜீரணமாகாது!

இன்னொரு ராஜா இருந்தார். அவரும் ஒரு இளைஞனை சிறையிலே அடைத்து விட்டார். விடுதலை செய்ய வேண்டும் என்றால் ஒரு நிபந்தனை என்றார். என்ன என்று கேட்டான்.

ஒரு ஆட்டுக்குட்டியை உன் முன்னாடி கொண்டு வந்து நிறுத்துவேன். நீ அதனிடம் ஒரு கேள்வி கேட்க வேண்டும் அது, அதற்குச் சரியான பதிலை சொல்ல வேண்டும்! அப்படி செய்தால் உனக்கு விடுதலை!" என்றார்

இளைஞன் யோசித்தான் சரி என்று ஒத்துக்கொண்டான். அதன் பிரகாரமே ஆட்டுக்குட்டியைப் பதில் சொல்ல வைத்துவிட்டான்.

என்ன நடந்தது தெரியுமா?

ஆட்டுக்குட்டியை கொண்டு வந்து நிறுத்தினார்கள். இவன் மெதுவாக அதனிடம் போனான். அதன் காதுக்கு பக்கத்தில் போய் "ஏப்ரலுக்கு அடுத்தது என்ன மாசம்?" என்று கேட்டான். அது உடனே "மே..!" என்று கத்தியது! இவன் விடுதலையாகி விட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்மேகம் கருக்கொள்ளும் காலம்: எமது உணவு பாதுகாப்பு எமது உற்பத்தியில்!



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை, விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

உலக நாடுகளில் புதிதாக போர்மேகம் கருக்கொள்ளத் தொடங்கியிருக்கின்றமை அனைவரும் எதிர்பாராத எங்கும் நடக்கக்கூடாத நிகழ்வுகள். எமது தேசத்தில் நாம் அனுபவப்பட்டது போதுமென்றாகிவிட்டது. போருக்கான உந்துதல் எமது நாட்டுக்கும் இதனால் பாதிப்பு இருக்கும் என்னும் ஊகங்கள் வலுப்பெற்று வருகின்றன. இதனைத்தவிர நம்நாட்டு விவசாய உற்பத்தியிலும் காலநிலை மாற்றத்தின் தாக்கம் உணரத் தலைப்பட்டு விளைச்சலின் இழப்பும் அதிகமாகி விட்டது. சிறிய தீவென்றாலும் இத்தகைய தாக்கத்திலிருந்து மீளமுடியாது என இயற்கையும் கட்டியங்கூறி நிற்கின்றது. விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சியின் உச்சநிலையிலிருந்தாலும் காலநிலை மாற்றம் என்பது பொதுவானதாக அனைத்து நாடுகளிலும் பல்வேறு விளைவுகளை ஏற்படுத்தி வருகின்றது. எமக்கானதை நாம் முறையான திட்டமிடலுடன் வினைத்திறனான வகையில் உற்பத்தி செய்தல் அவசியம். எமது நாட்டில் உணவுப்பஞ்சம் ஏற்படும் நிலைக்கு நாமே காரணமாகிவிடக்கூடாது. மாறாக எமக்காக எவரும் உற்பத்தி செய்து இலவசமாக தரவும் இல்லை என்பதோடு எமக்கான உணவு எந்தக்கட்டத்திலும் கையேந்தும் நிலைக்கு வந்துவிடக்கூடாது.

எமது தேசத்தின் விவசாய அபிவிருத்தி என்பது காலங்காலமாக பலவிதமான எதிர்பார்ப்புக்களோடு விவசாயத்தில் தன்னிறைவு என்னும் தொனிப்பொருளை நோக்கியதாக இருந்தாலும் நாம் அந்த இலக்கினை அடைவதற்கான உந்துதல் மந்தமாகவே காணப்படுகின்றது. இதற்கு குடும்பப் பொருளாதாரத்தின் நலிவுத்தன்மை முக்கிய காரணங்களாக காணப்படுகின்றன. எமது தேசத்தின் பொருளாதாரக் கட்டமைப்பு கடந்த வருடங்களில் சரிவடையத் தொடங்கியதிலிருந்து இவ்வாறான நிலைமைக்குள் நாம் திணிக்கப்பட்டிருக்கின்றோம். ஏறக்குறைய ஊட்டச்சத்துக் குறைபாட்டுடன் சிறுவர்களும் பெண்கள் மற்றும் முதியவர்களும் அடங்குகின்றனர். ஐக்கிய நாடுகள் தாபனத்தால் முன்னகர்த்தப்படும் பேண்தகு அபிவிருத்தி இலக்குகளின் நிர்ணயம் 2030 ஆம் ஆண்டில் அனைத்து நாடுகளிலும் நடைமுறைக்கு வரவேண்டும். 2028 ஆம் ஆண்டினை குடும்ப விவசாயத்துக்கான (Family farming) நூற்றாண்டு திட்டமாக பரிந்துரைத்து அதனை நடைமுறைப்படுத்துகின்றனர். எமது நாட்டில் நடைபெற்ற உள்ளூர் போரினாலும் அதன் பின்னரான முன்னெப்போதும் இல்லாத பொருளாதார சீர்குலைவினாலும் நமது நாடு பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை அடையும் நிலைகளில் பின்னிற்கின்றது. இந்த வெற்றிடம் எமது மக்களின் வாழ்வாதாரத்தில் நிச்சயமாக மாற்றத்தை ஏற்படுத்தும் என்னும் அச்சநிலை உயர்ந் தெழுந்திருக்கின்றது.

எமக்கான உற்பத்தியை நாம் மேற்கொள்ளாவிடில் அது எமது மக்களை பட்டினியின் அகோரத்திற்குள் இழுத்து சென்றுவிடும். உணவுற்பத்தியில் நாம் அதீத கரிசனை கொள்வது எமது மக்களை காப்பாற்றும் செயலாகும். எமது உணவுற்பத்தியை அதிகரித்துக் கொள்வதற்கு எமக்கான விளைநிலத்தின் வரையறை, மேலதிகமாகக் கிடைக்கக்கூடிய உற்பத்தி, அவற்றை சந்தைப்படுத்தும் பலம், இவையனைத்தையும் தாண்டி அனைத்து மக்களுக்குமான தேவை என்பன உள்ளடங்கலாகும். எது எப்படியிருப்பினும் எமக்கான உணவினை உற்பத்தி செய்வதிலிருந்து எமது குறிக்கோளை நகர்த்த முடியாதிருக்கும். குடும்ப வேளாண்மையை மீண்டும் வலுப்பெறுவதற்கானத் திட்டங்களை நடைமுறைப்படுத்தல் இதற்கொரு வழிவகையாகும். ஒவ்வொரு குடும்பத்தின் தேவையையும் குறிப்பிட்ட சதவீதம் அந்தந்த குடும்பங்களின் உற்பத்தி மூலம் எட்டுவதற்கான வாய்ப்புக்களையும் அதிகரிக்க வேண்டும்.

## இனியொரு பசுமைப்புரட்சிக்கு...



பேண்தகு அபிவிருத்தியினை எட்டுவதற்கு நம் நாடு இன்னும் பலமாக திட்டமிடுவதிலும் அதனை நடைமுறைப்படுத்துவதிலும் அதிக அக்கறை செலுத்தவேண்டும். இருக்கின்ற நிலவளத்தை முறையான திட்டமிடல் மூலம் பயிர்ச்செய்கைக்குள் உட்படுத்துவதும் எமது மக்களை பொருளாதார ரீதியிலும் தற்சார்புடையவர்களாக மாற்றுவதும் அவசியமாகின்றது. நகரப்புறங்களில் நிலைக்குத்தான பயிர்ச்செய்கையை ஊக்குவித்தல், குடும்ப நகர சேதன கழிவுகளை முறையாக பசளைகளாக்கி அவற்றை பயிர்செய் நிலங்களுக்கு பயன்படுத்தல் வேண்டும். உணவுத்தட்டுப்பாடு ஏற்படாவண்ணம் உணவுற்பத்தியை அதிகரிக்கும் போது அது மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் அவர்களது பொருளாதாரத்தை வலுப்படுத்தவும் உதவும். தொழிற்சாலைகளின் எண்ணிக்கையை அதிகரிக்கும் போது பலருக்கான வேலைவாய்ப்பை வழங்கும் செயலாக கருதலாம். இங்கே தொழிற்சாலை விளைபொருட்கள் உலகத்தரத்திற்கிணையானதாக பொதி செய்யப்பட்டு அவற்றின் தன்மையில் விழுக்காடு ஏற்படாது பயன்பாடு அதிகரித்ததால் தொழிற்றுறைக்கான வாய்ப்புக்களும் அவற்றினை வினைத்திறனாக செய்யும் இளைஞர் யுவதிகளுக்கான தொழிலாகவும் பரிணமிக்க வாய்ப்புக்களுண்டு.

அபிவிருத்தி இலக்குகளை எட்டுவதற்கு நம்நாடு இன்னும் பலமாக திட்டமிடுவதிலும் அதனை நடைமுறைப்படுத்துவதிலும் கவனஞ் செலுத்த வேண்டும். உணவுக்கான விவசாய உற்பத்தியில் நாம் தங்கியிருந்தாலும் உணவை நேரடியாக உற்பத்தி செய்யும் விளைபொருட்களிலிருந்து பெறுவதிலும் பார்க்க விளைபொருட்களை மதிப்பேற்றஞ் செய்வதிலும் குறிப்பாக அவற்றை விவசாயஞ் சார்ந்த தொழிற்றுறையின் விளைபொருளாக மாற்றும் போது இவ்வாறான தொழிற்றுறையின் விருத்தி பன்மடங்கு உயர்வு பெறும். அத்துடன் அது சார்ந்த தொழிற்றுறை வளர்ச்சி அதிகரிப்பதுடன் எங்களூர் பொருட்களின் உற்பத்தியும் அதிகரிக்கவேண்டும். உலகத் தரத்தில் உற்பத்திப்பொருட்கள் உலாவரும் போது மட்டுமே அவற்றின் விலையில் உயர்வு பெற்று அவற்றின் விற்பனையால் எமது அந்நியசெலாவணி மேன்மையுறும். குறிப்பாக தற்போதைய நிலையில் வடமாகாணத்தின் அந்நிய செலாவாணி பங்களிப்பென்பது ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடும் போது மிக குறைவானதாகவே இருக்கின்றது. எமது பிரதேசத்தில் இருக்கின்ற வசதிவாய்ப்புக்களை அலசியாராய்வதன் மூலம் எமக்கான உணவுற்பத்தியை உயர்வடையச்செய்ய முடியும்.

அந்த நிலையில் எமது உற்பத்தியில் பல்வகைத்தன்மையை கொண்டிருத்தல், பலவகைப் பயிர்களை பயிரிடுதலுடன் அதிகம் உள்ளீடுகள் தேவையற்ற தாவரங்களுக்கு முன்னுரிமையளிக்கலாம். உற்பத்தியான பொருட்களை தரமானவையாக பதப்படுத்தலும் பேணலும் முறையாக தரமான பொதி செய்வதுடன் அவற்றை சந்தைப்படுத்தலும் பொருத்தமான காலத்தில் ஏற்படுத்தப்படல் வேண்டும்.

இருக்கின்ற நிலவளத்தை முறையான திட்டமிடல் மூலம் பயிர்ச்செய்கைக்குள் உட்படுத்துவதும் எமது மக்களை பொருளாதார ரீதியிலும் தற்சார்புடையவர்களாக மாற்றுவதும் அவசியமாகின்றது. நகரப்புறங்களில் நிலைக்குத்தான பயிர்ச்செய்கையை ஊக்குவித்தல், குடும்ப நகர சேதனக் கழிவுகளை முறையாக பசளைகளாக்கி அவற்றை பயிர்செய் நிலங்களுக்கு பயன்படுத்தல் வேண்டும். உணவுத்தட்டுப்பாடு ஏற்படாவண்ணம் உணவுற்பத்தியை அதிகரிக்கும் போது அது மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் அவர்களது பொருளாதாரத்தை வலுப்படுத்தவும் உதவும். தொழிற்சாலைகளின் எண்ணிக்கையை அதிகரிக்கும் போது பலருக்கான வேலைவாய்ப்பை வழங்கும் செயலாக அமையும். இங்கே தொழிற்சாலையின் விளைபொருட்கள் உலகத்தரத்திற்கிணையானதாக பொதி செய்யப்பட்டு விற்பனைக்கு வரும்போது அதனால் கிடைக்கும் ஆதாயமும் அதன் மூலம் தொழில் விருத்தியும் சாத்தியமாகும். விவசாயம், மீன்பிடி மற்றும் கால்நடைவளர்ப்பு என்பன எமக்கான அபிவிருத்திக்கான வழிவகைகளாகும். அவற்றில் நாம் கரிசனை செலுத்தினாலேயே நாம் எதிர்பார்க்கின்ற பஞ்சம் பட்டினியிலிருந்து மக்களை காப்பாற்றிக் கொள்ள முடியும்.

எமது பிரசேதத்திலுள்ள இளைஞர் யுவதிகளை எமது பிரதேசத்திலேயே தொழில்வாய்ப்புக்களை பெருக்கி பிரதேசத்தின் வளர்ச்சிக்குரியவர்களாக மாற்றவேண்டிய பொறுப்பு அனைவருக்கும் உண்டு. வெளிநாடு என்னும் போர்வைக்குள் சிக்குண்டிருக்காது எமது தேசத்தின் வளர்ச்சியில் அவர்கள் அனைவரும் பங்குதாரர்களாக மாற வழிவகை செய்து கொடுத்தல் அவசியமானதாகும். எமது பிரதேசத்தில் உற்பத்தியாகும் உணவின் மூலம் எமது உணவுப் பிரச்சினையை நாம் தீர்க்க முடியுமாயின் எந்த இடர்வரினும் நாம் அதிலிருந்து எம்மைக் காப்பாற்றிக் கொள்ளவும் முடியும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கல்கியின் பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 765



காற்றுப் போக்கு இல்லாதபடியால் மூச்சுத் திணறியது. . மேலும் வியர்த்துக் கொட்டியது. ஐயனார் கோவிலிலிருந்து கடம்பூர் மாளிகை எவ்வளவு தூரம் என்று எண்ணியபோது அவனுக்கு முதலில் மலைப்பாயிருந்தது. ஆனால் மறுபடியும் யோசித்தான். மாளிகையின் முன் வாசலிலிருந்து வளைந்தும் சுற்றியும் சென்ற தெருக்களின் வழியாகவும், பின்னர் காட்டுப் பாதைகளின் வழியாகவும் வந்தபடியால் அவ்வளவு தூரமாகத் தெரிந்தது. அரண்மனையின் பின் பகுதியிலிருந்து நேர்வழியாக வந்தால் ஐயனார் கோவில் அவ்வளவு தூரத்தில் இராது. வில்லிலிருந்து அம்பு விட்டால் போய் விழக்கூடிய தூரந்தான் இருக்கும். அது உண்மையானால், இதற்குள் அரண்மனை வெளி மதிலை அவன் நெருங்கி வந்திருக்க வேண்டுமே.

ஆம் அப்படித்தான், மேலே எங்கிருந்தோ திடீரென்று வந்தியத்தேவன் மேல் குளிர்ந்த காற்று குப்பென்று அடித்தது. வியர்த்து விறுவிறுத்து மூர்ச்சையடையும் நிலைக்கு வந்திருந்த வந்தியத்தேவனுக்கு அந்தக் காற்று புத்துயிர் தந்தது. அண்ணாந்து பார்த்தான் உயரத்தில் வெகு தூரத்தில் சிறிது வெளிச்சம் தெரிந்தது. பேச்சுக் குரல்களும் கேட்டன.

மதில்சுவரின் மேல் ஆங்காங்கு வீரர்கள் இருந்து காவல் புரிவதற்காக அமைத்த கொத்தளங்களில் அது ஒன்றாக இருக்க வேண்டும். அதன் வழியாகச் சுரங்கப் பாதையில் காற்றுப் புகுவதற்கு ஏற்பாடு செய்திருக்க வேண்டும். ஆனால் காற்றுத்தான் புகலாமே தவிர, மனிதர்கள் கீழே இறங்குவதற்கோ மேலே ஏறுவதற்கோ அங்கே வசதி ஒன்றுமில்லையென்பதையும் வந்தியத்தேவன் கண்டான்.

கடம்பூர் அரண்மனைக்குள் புகுந்தாகிவிட்டதென்ற எண்ணமும் மேலிருந்து வந்து அவன் மீது அடித்த குளிர்ந்த காற்றும் அவனுக்குப் புத்துயிரை அளித்துப் புதிய உற்சாகத்தை உண்டு பண்ணின. சுரங்கப்பாதை போய்ச் சேரும் இடம் இனி சமீபத்திலே தான் இருக்கும். அது பொக்கிஷ நிலவறையாயிருக்குமா? பெரிய பழுவேட்டரையரைப் போல் சம்புவரையரும் ஏராளமான முத்தும், பவளமும், இரத்தினமும், வைரமும், தங்க நாணயங்களும் சேர்த்து வைத்திருப்பாரா? அங்கே பார்த்தது போல் இங்கேயும் அந்த ஐசுவரியக் குவியல்களுக்கிடையில் செத்த மனிதனின் எலும்புக்கூடு கிடக்குமா? தங்க நாணயங்களின் பேரில் சிலந்தி வலை கட்டியிருக்குமா?

இம்மாதிரி எண்ணிக் கொண்டே போன வந்தியத்தேவன் காலில் ஏதோ தட்டுப்பட்டுத் திடுக்கிட்டான். அப்புறம் அது படிக்கட்டு என்று தெரிந்து தைரியம் அடைந்தான். ஆம் அந்தப் படிக்க்ட்டில் ஏறினதும் பொக்கிஷ நிலவறையைக் காணப்போவது நிச்சயம். இல்லாவிட்டால், பெண்கள் வசிக்கும் அந்தப்புரமாயிருக்கலாம், அப்படியானால் தன் பாடு ஆபத்துதான்! ஆ! கந்தமாறன் தங்கை மணிமேகலை! அந்த கருநிறத்து அழகி அங்கே இருப்பாள்! ஒரு சமயம் அவளை மணந்து கொள்ளும் யோசனை தனக்கு இருந்ததை நினைத்த போது வந்தியத்தேவன் புன்னகை பூத்தான்.


அந்தப் புன்னகையைப் பார்த்து மகிழ அங்கு யாரும் இல்லைத்தான். ஒருவேளை அந்தப்புரத்து மாதர் அலங்கோலமாக இருக்கும் சமயத்தில் திடீரென்று அவர்களிடையே தான் தோன்றினால்! இதை நினைக்க அவனுக்குச் சிரிப்பே வந்து விட்டது.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## சொல் புத்தி



ஒரு தந்தையும் மகனும் தங்களுடைய கழுதையை விற்பதற்காக-சந்தைக்கு ஓட்டி சென்று கொண்டிருந்தனர். அதைப் பார்த்த வழிப்போக்கர்கள் சிலர் இவர்களைப் பார்த்து, "பாரேன் இவர்களை, அற்புதமான கழுதையை கூட்டிக் கொண்டு நடந்து சென்று கொண்டிருக்கிறார்கள். இவர்களில் யாராவது அதில் ஏறிச் செல்லலாம். ஆனால் பொருளைக் கொடுத்த கடவுள் அதைப் பயன்படுத்த அறிவைக் கொடுக்கவில்லை, இவர்களுக்கு" என்று ஏளனம் செய்தனர்.

இதனால் வெட்கப் பட்டுப்போன தந்தையும் மகனும் ஒரு முடிவு செய்து, வயதில் சிறியவனான மகன் கழுதையின் மேல் உட்கார்ந்து கொண்டு, தந்தை நடந்தவாறே இருவருமாகப் போனார்கள்.

அப்போது வேறு சில வழிப்போக்கர்கள், "இங்கப் பாருடா அநியாயம்! பெரியவர் நடக்கமுடியாமல் நடக்கிறார், இந்த வாலிபப் பையன் சொகுசாக கழுதை மேல் சவாரி செய்கிறான்" என்று கிண்டலடித்தனர்.

இதைக் கேட்டு இவர்கள் கூறுவதில் நியாயம் இருப்பதாக உணர்ந்த பையன், தந்தையைக் கழுதையில் உட்காரவைத்து இருவரும் புறப்பட்டனர். இன்னும் சற்றுத் தூரம் சென்ற பின் ஒரு வழிப்போக்கன் இவர்களைப் பார்த்து "கலி முற்றி விட்டது. இங்கப் பாரு! நல்லா சுக்கு மாந்தடி போல இருக்கிற பெரியவர், ஒரு நோஞ்சான் பையனை நடக்கவிட்டு தான் மட்டும் சொகுசாக கழுதை மேல் ஏறிப் போகிறார்" என்றான். வழக்கம் போல இதைக் கேட்ட தந்தை-மகன் இருவரும் ஒரு சேர கழுதைமேல் ஏறி கொண்டனர்.

இனி இந்த உலகம் தங்களைப் பார்த்துக் கேலி பேசாது என்று தந்தைக் கூறினார். சிறிது தூரம் சென்ற பின் இன்னொரு வழிப்போக்கன் இவர்களைப் பார்த்து "இரண்டு தடியன்கள், ஒரு நோஞ்சான் கழுதையின் மேல் ஏறி சவாரி செய்கிறார்கள் இரக்கங்கெட்ட ஜென்மங்கள்!" என்று காட்டமாக விமர்சித்தான்.

இதைக் கேட்டு வருந்திய தந்தையும், மகனும் கழுதையிலிருந்து குதித்தனர். இனி என்ன செய்வது? என்று சிந்தித்தனர். நீண்ட ஆலோசனைக்குப் பிறகு "மக்கள் மனம் மகிழ கழுதையை நாம் கட்டித் தோளில் சுமந்து செல்வோம்!" என்று முடிவு செய்தனர். அவ்வாறு கழுதையைத் தோளில் சுமந்து செல்கையில் வழியில் ஒரு காட்டாறு குறுக்கிட்டது. அதைக் கடக்கையில் கழுதை மிரண்டு போய் வெள்ளத்தில் விழுந்தது. கால்கள் கட்டப்பட்டிருந்ததால் அதனால் நீந்த முடியவில்லை. எனவே அது ஆற்று வெள்ளத்தில் அடித்துச் செல்லப் பட்டது. தந்தையும் மகனும் செய்வதறியாது திகைத்து நின்றனர்.

நீதி : சொல் புத்தியைவிட சுயபுத்தி மிக அவசியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறரின் விசேஷ செயல்களையும், குணங்களையும் பாராட்டும் போதே ஒற்றுமை மலர்கிறது.
– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மக்கள் ஆர்வமற்றிருந்தாலும் தேர்தலில் ஆரவாரம் இருக்காது

உள்ளூராட்சி சபைத் தேர்தல் அமைதியாக நடந்து முடிந்துள்ளது.

முன்னைய காலங்களில் தேர்தல் என்றால் அதில் ஆரவாரமும் ஆர்ப்பரிப்பும் இருக்கும்.

அதிலும் உள்ளூராட்சி சபைத் தேர்தல் என்றால் சொல்லவும் வேண்டியதில்லை. அந்தளவுக்கு மக்கள் தத்தம் வேட்பாளர்களை ஆதரித்துக் களமிறங்குவர்.

ஆனால் இம்முறை உள்ளூராட்சி சபைத் தேர்தல் என்பது, தேர்தல் நடைபெறுகிறதா? என்று கேட்குமளவில் அசுமாத்தம் இல்லாமல் நடந்து முடிந்திருக்கிறது.

ஆக, ஒரு தேர்தல் அமைதியாக நடைபெற்றது என்றால், அதற்கு நாட்டில் ஏற்பட்டுள்ள அமைதியும் பாதுகாப்புப் பலப்படுத்தல்களுமே காரணம் என்ற முடிவுக்கு யாரும் வந்துவிடக் கூடாது.

மாறாக, தேர்தலில் மக்கள் ஆர்வமற்றவர்களாக இருந்தாலும் அந்தத் தேர்தல் அமைதியாகிவிடும் என்ற உண்மையை நாம் ஏற்றுத்தானாக வேண்டும்.

அந்தவகையில், நேற்று நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தல் என்பது தமிழர் தாயகத்தில் ஏனோதானோ என்ற மனநிலையோடு மக்கள் வாக்களித்ததைக் காண முடிந்தது.

என்ன செய்வது தேர்தலில் வாக்களித்து எந்தப் பிரயோசனமும் இல்லை.

ஆயினும் எங்கள் இனம், எங்கள் தாயகம் அதை மற்றவர்களுக்கு நாம் விட்டுக் கொடுத்துவிடக்கூடாது என்ற ஒரே நினைப்பில் மட்டுமே வாக்களிப்பு இடம்பெற்றது.

இதையும் கடந்து, தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்கள் சார்ந்து அவர்கள் ஆற்றிய சமூக சேவை மற்றும் அவர்களின் சமூகப் பற்று என்பனவும் சேர்ந்து தனிப்பட்ட வேட்பாளருக்காக வாக்களிக்கின்ற சூழமைவும் இருந்ததன் காரணமாக, உள்ளூராட்சி சபைத் தேர்தல் வாக்களிப்பு ஓரளவுக்கு பரவாயில்லை என்று ஆறுதலடைய வைத்தள்ளது.

எனினும் உள்ளூராட்சி சபைத் தேர்தலை மட்டும் வைத்துக் கொண்டு ஏனைய தேர்தல்கள் பற்றிய தீர்மானங்களை யார் அனுமானித்தாலும் அது மிகத் தவறாகவே இருக்கும்.

ஏனெனில் எம் தமிழ் மக்கள் மிகவும் நிதானமாகச் சிந்தித்துச் செயலாற்ற வல்லவர்கள். தேர்தலில் அவர்கள் ஒரே மாதிரியான முடிவுகளை எடுப்பதில்லை.

அந்த வகையில் ஜனாதிபதித் தேர்தல், பொதுத் தேர்தல் என்பவற்றில் எங்கள் மக்கள் எடுத்த தீர்மானங்கள் எத்தகையது என்பதை நாம் உணர முடியும்.

அதேபோன்று உள்ளூராட்சி சபைத் தேர்தல், மாகாண சபைத் தேர்தல் என்பவற்றில் எம் மக்கள் எடுக்கின்ற தீர்மானங்கள் வேறு விதமானவை.

ஆக, எம் மக்கள் எடுக்கின்ற அத்தனை தீர்மானங்களும் எம் தமிழினம் வாழ வேண்டும் என்பதை மையப்படுத்தியது.

இதைத் தமிழ் அரசியல் தரப்புகள் மிகத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

## முன்னெப்போதும் இல்லாத வகையில் அமைதியான தேர்தலை அரசு நடத்தியுள்ளது

### அமைச்சர் பிமல் ரத்நாயக்க

(கொழும்பு)

முன்னெப்போதும் இல்லாத வகையில் அமைதியான தேர்தல் ஒன்றை அரசாங்கம் நடத்திக் காட்டியுள்ளதாக அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்று குருநாகல் சென். ஜோன்ஸ் கல்லூரியில் தன் குடும்பத்தினர் சகிதம் வாக்களிக்க வந்திருந்த அமைச்சர் பிமல் ரத்நாயக்க, ஊடகங்களுக்குக்கருத்து வெளியிடும் போதே அவர் இந்த விடயத்தைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் கடந்த காலங்களை விட நாட்டில் ஒரு மாற்றம் நிகழ்ந்துள்ளது.

தேர்தல் ஒன்று நடைபெறுகின்றதா என்று சந்தேகிக்கும் அளவுக்கு இன்று (நேற்று) அமைதியான முறையில் தேர்தல்நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது.

அரசாங்கம் அந்தளவுக்கு அமைதியான தேர்தல் ஒன்றை நடத்திக் காட்டியுள்ளது. படிப்படியாக ஏனைய விடயங்களிலும் இந்த நாட்டில் ஒரு மாற்றத்தைக் கொண்டு வருவோம் எனத் தெரிவித்துள்ளார். (ம-4,7)

## தேர்தல்கள் ஆணைக்குழு அரசு சார்பாகச் செயற்படுகிறது

### சம்பிக்க ரணவக்க குற்றச்சாட்டு

தேர்தல்கள் ஆணைக்குழு அரசாங்கத்திற்குச் சார்பாக செயற்படுவதாக முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க குற்றம் சுமத்தியுள்ளார்.

நேற்று உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வாக்களிப்பில் பங்கேற்றதன் பின்னர் அவர் ஊடகங்களிடம் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட அரசாங்கத் தரப்பினர் தொடர்பிலான முறைப்பாடுகள் குறித்து தேர்தலகள் ஆணைக்குழு மிகமந்த கதியில் செயற்பட்டு வருகிறது.

எதிர்க்கட்சிகள் வெற்றியீட்டும் உள்ளூராட்சி மன்றங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்வதில்லை என ஜனாதிபதி கூறிய விடயம் உள்ளிட்ட பல்வேறு முறைப்பாடுகள் குறித்து தேர்தலகள் ஆணைக்குழு உரியநடவடிக்கை எடுக்கவில்லை.

இந்த நிலைமை மிகவும் கவலையளிப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தேர்தல் பிரசார கண்காணிப்புப் பணிகளை தேர்தல் ஆணைக்குழுவும் உரிய நிறுவனங்களும் சரியான முறையில் மேற்கொள்ளவில்லை என்பதைக்கவலையுடன் தெரிவித்துக் கொள்வதாகத் குறிப்பிட்டுள்ளார். (ம-4,7)

## வாக்களிப்பில் மந்தம்

## இங்கிலாந்து போல் இலங்கை முன்னேறிவிட்டது

### ரணில் கிண்டல்

பொது மக்கள் வாக்களிப்பதில் ஆர்வமின்றி இருப்பதில் இங்கிலாந்து போல இலங்கையும் முன்னேறிவிட்டதாக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கிண்டல் செய்துள்ளார்.

நேற்றுக் கொழும்பு றோயல் கல்லூரியில் அமைந்துள்ள வாக்குச் சாவடியில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வாக்கைச் செலுத்திய பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் இந்தத் தேர்தலில் வாக்களிக்கும் ஆர்வம் பொதுமக்களிடம் இல்லை. கணிசமான பொதுமக்கள் வாக்களிக்க வரப்போவதில்லை.

முக்கியமான சில வேட்பாளர்கள் இருக்கும் பிரதேசங்களில் வாக்களிப்பு வீதம் சற்று அதிகரிக்கலாம். ஆனால் ஏனைய இடங்களில் வாக்களிப்பு மந்தமாகவே இருக்கும்.

நாட்டு மக்கள் வாக்களிப்பது குறித்து அந்தளவுக்கு ஆர்வம் அற்றுப் போயிருக்கின்றார்கள். அந்த வகையில் நம் நாடும் இங்கிலாந்தைப் போன்று முன்னேறிவிட்டது என்றும் கூறியுள்ளார். (ம-4,7)

## தேர்தலில் ஆளும் கட்சி அமோக வெற்றி பெறும்

### அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஆளும் கட்சி அமோக வெற்றியீட்டும் என அமைச்சரவை பேச்சாளர், அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

தேர்தலில் வாக்களித்த பின் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

தேர்தலில் வாக்களிப்பு வீதம் குறைந்தாலும் ஆளும் கட்சி வெற்றியீட்டும்.

கடந்த நான்கரை மாதங்களில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நாட்டு மக்களுக்கு வழங்கிய சேவை தொடர்பில் மக்களுக்கு நல்ல தெளிவு உண்டு.

பொருளாதாரம் வளர்ச்சியடைந்துள்ளது, நாட்டின் பொருளாதாரம் ஸ்திரமடைந்துள்ளது எனவும் உலக நாடுகள் மத்தியில் அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளது.

இந்த அரசாங்கத்திற்கு எதிராகப் பல்வேறு போலியான குற்றச்சாட்டுக்களையும் சேறு பூசல்களையும் செய்த எதிர்க்கட்சிகளுக்கு மக்கள் நல்ல பாடம் கற்பிப்பார்கள் என்பதில் ஐயமில்லை என அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார். (ம-4,7)

## தேர்தலுக்கு இடையூறு

## இரு வேட்பாளர்கள் உட்பட மூவர் கைது

(மட்டக்களப்பு)

ஏறாவூர்மற்றும்வாழைச்சேனை பிரதேசங்களில் தேர்தல் நடவடிக்கைக்கு இடையூறு விளைவித்த ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சிகளை கொண்ட இரு வேட்பாளர்கள் உட்பட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த கைது நடவடிக்கை நேற்று (6) மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள ஓட்டமாவடி அந்நூர் பாடசாலையில் வாக்களிப்பு நிலையத்துக்கு அருகில் ஒரு கட்சியின் வேட்பாளர் அவரது ஆதரவாளர் உட்பட இருவர், வாக்காளர்களை சுதந்திரமாக வாக்களிக்க விடாது இடையூறு விளைவித்துள்ளனர்.

இதையடுத்து குறித்த வேட்பாளர் மற்றும் ஆதரவாளரை பொலிஸார் கைது செய்தனர்.

அதேவேளை, ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள மீராங்கேணி வாக்களிப்பு நிலையத்துக்குச் சென்ற ஐ.தே.க வேட்பாளர் ஒருவர் சென்று தமது கட்சிக்கு வாக்களிக்குமாறு கோரி வாக்காளிப்புக்கு இடையூறு விளைவித்த வேட்பாளரைக் கைது செய்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக அந்தந்தப் பொலிஸ் நிலைய பொலிஸார் தெரிவித்தனர். (ம-4,7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராகு–கேது பெயர்ச்சி பலன்கள்

## 26.04.2025–12.11.2026 வரை

## ராகு வருமிடம் இரண்டு நல்ல தகவல் வரும் திரண்டு

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



இதுவரை உங்கள் ராசிக்கு 3ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த ராகு பகவான், 26.4.2025 அன்று குடும்ப ஸ்தானத்திற்கு வருகிறார். எனவே குடும்ப முன்னேற்றம் கூடும். கொடுக்கல்- வாங்கல் ஒழுங்காகும். இதுவரை நடைபெறாத காரியங்கள் இப்பொழுது துரிதமாக நடைபெறும். அதே சமயம் கேது பகவான் உங்கள் ராசிக்கு 8ஆம் இடமான அஷ்டம ஸ்தானத்தில் சஞ்சரிக்கப் போகிறார். ஞானகாரகன் கேது அஷ்டமத்தில் இருப்பதால் மிக கவனம் தேவை. இந்த ராகு-கேது பெயர்ச்சியின் விளைவாக 2ஆம் இடத்திற்கு ராகு வரப் போகிறார். இதனால் பொருளாதாரத்தில் இருந்த பற்றாக்குறை அகலும். வியாபாரப் போட்டிகளை முறியடிப்பீர்கள். சவாலாகத் தெரிந்த வேலைகளைக் கூட சாதாரணமாக முடிப்பீர்கள். கல்யாணப் பேச்சுவார்த்தை கைகூடும். உத்தியோகத்தில் உயர் அதிகாரியின் ஆதரவு உண்டு. உறவினர் வழியில் இருந்த மனக்கசப்பு மாறும். நினைத்ததை நினைத்தபடி முடிப்பீர்கள். தெளிவான சிந்தனையோடு செயற்படுங்கள்.

அஷ்டமத்தில் கேது சஞ்சரிப்பது அவ்வளவு நல்லதல்ல. மேலும் அவர் சூரியன் வீட்டில் சஞ்சரிப்பதால், அரசு வழி சிக்கல்களுக்கு ஆளாக நேரிடும். ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும். சர்ப்ப கிரகங்கள் 8இல் வரும்பொழுது சஞ்சலங்கள் அதிகரிக்கும். இது போன்ற நேரங்களில் தைரியமும், தன்னம்பிக்கையும் அதிகம் தேவை. அதோடு தெய்வ நம்பிக்கையும் அவசியம். உத்தியோகத்தில் உயர் அதிகாரிகளை பகைத்துக் கொள்ள வேண்டாம். வேலைப்பளு கூடும். அனைவரிடமும் அனுசரித்துச் செல்லுங்கள்.

**குரு சாரத்தில் ராகு சஞ்சாரம் (26.4.2025 முதல் 31.10.2025 வரை)**

பூரட்டாதி நட்சத்திரக் காலில் குரு சாரத்தில் ராகு பகவான் சஞ்சரிக்கும் பொழுது, நன்மையும், தீமையும் கலந்தே நடைபெறும். குரு பகவான் உங்கள் ராசிக்கு சகாய -விரய ஸ்தானாதிபதி ஆவார். எனவே சுப விரயம் ஏற்படும். குடும்பச்சுமை அதிகரிக்கும். இல்லத்திற்குத் தேவையான பொருட்களை வாங்குவீர்கள். இடமாற்றம், வீடு மாற்றம் வரலாம். உத்தியோகத்தில் பணிநீக்கம் செய்யப்பட்டவர்கள் மீண்டும் பணியில் சேர வாய்ப்பு உண்டு. வியாபாரத்தில் பழைய பங்குதாரர்கள் சில பிரச்சினைகளைச் சந்திக்க நேரிடும்.

**சுய சாரத்தில் ராகு சஞ்சாரம் (1.11. 2025 முதல் 9.7.2026 வரை)**

சதய நட்சத்திரக் காலில் தனது சுய சாரத்தில் ராகு பகவான் சஞ்சரிக்கும் பொழுது, எதிர்பார்ப்புகள் அனைத்தும் நிறைவேறும். ஏற்பாடு செய்த முயற்சிகளிலும் வெற்றி கிடைக்கும். வருமானம் திருப்திகரமாக இருக்கும். வளர்ச்சிப் பாதையில் இருந்த இடையூறு அகலும். தொழிலில் புதிய ஒப்பந்தங்கள் வரலாம். நீங்கள் துணிந்து எடுத்த முடிவு மற்றவர்களை ஆச்சரியப்படுத் தும். வீண்வாக்குவாதங்களைத் தவிர்ப்பது நல்லது. உங்களுக்கு கொடுக்கப்பட்ட பொறுப்புகளை மற்றவர்களிடம் ஒப்படைப்பது அவ்வளவு நல்லதல்ல.

**செவ்வாய் சாரத்தில் ராகு சஞ்சாரம் (10.7.2026 முதல் 12.11.2026 வரை)**

அவிட்ட நட்சத்திரக் காலில் செவ்வாய் சாரத்தில் ராகு பகவான் சஞ்சரிக்கும் பொழுது இடம் வாங்கும் எண்ணம் கைகூடும். பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துக்கள் நல்ல முடிவுக்கு வரும். பொருளாதாரத்தில் இருந்த ஏற்ற இறக்க நிலை மாறும். குடியிருக்கும் வீட்டால் ஏற்பட்ட பிரச்சினை அகலும். வெளிநாட்டுப் பயணத்தில் தடை வரலாம். எதையும் திட்டமிட்டுச் செய்ய வேண்டிய நேரம் இது. பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்ளுங்கள்.

**சூரிய சாரத்தில் கேது சஞ்சாரம் (26.4.2025 முதல் 27.6.2025 வரை)**

உத்திரம் நட்சத்திரக்காலில் சூரிய சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது, மிகமிக கவனமாக செயற்படுங்கள். எதிலும் ஈடுபாடு இருக்காது. உதவி செய்வதாகச் சொன்னவர்கள், கடைசி நேரத்தில் கையை விரிப்பர். நண்பர்கள் பகையாக மாறுவர். புது முயற்சிகளில் தடைகள் குறுக்கிடும். உற வினர்களிடம் பேசும்போது வார்த்தைகளில் கவனம் தேவை. குடும்பத்தில் சண்டை, சச்சரவு அதிகரிக்கும். உத்தியோகத்தில் மன வருத்தம் ஏற்படும். பொறுமையும், நிதானமும் அதிகம் தேவைப்படும்.




**சுக்ர சாரத்தில் கேது சஞ்சாரம் (28.6.2025 முதல் 5.3.2026 வரை)**

பூரம் நட்சத்திரக் காலில் சுக்ர சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது, பிள்ளைகள் வழியில் சுபகாரியங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்பு உண்டு. ஆடை, ஆபரணப் பொருட்கள் வாங்கும் யோகம் உண்டு. பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துக்கள் சாதகமாக முடியும். தொழிலில் புதிய திருப்பங்கள் ஏற்படும். பெற்றோரின் உடல் நலனில் அக்கறை காட்டுங்கள். புதிய ஒப்பந்தங்கள் வந்துசேரும். உத்தியோகத்தில் பதவி உயர்வும், ஊதிய உயர்வும் வருவதற்கான அறிகுறி தென்படும். சகோதர வழியில் உதவி கிடைக்கும்.

**சுய சாரத்தில் கேது சஞ்சாரம் (6.3.2026 முதல் 12.11.2026 வரை)**

மகம் நட்சத்திரக் காலில் சுய சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது, ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும். ஆதாயத்தைக் காட்டிலும் விரயங்களே கூடுதலாக இருக்கும். எதையும் திட்டமிட்டுச் செய்ய இயலாது. தொழில் மற்றும் உத்தியோகத்தில் குறுக்கீடு அதிகரிக்கும். பணப்பொறுப்பு சொல்லி வாங்கிக் கொடுத்த தொகையால் பிரச்சினை வரலாம். உத்தியோகத்தில் பணிச்சுமை உருவாகும். முயற்சிகளில் வெற்றி கிடைக்க முறையான வழிபாடு தேவை.

**சனிப்பெயர்ச்சிக் காலம்**

6.3.2026 அன்று சனி பகவான், மீன ராசிக்கு பெயர்ச்சியாகிறார். இப்பொழுது உங்கள் ராசிக்கு ஏழரைச் சனி முழுமையாக விலகிவிட்டது. எனவே தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். துணையாக இருக்கும் நண்பர்கள் தோள்கொடுத்து உதவுவர். தடைப்பட்ட காரியங்கள் துரிதமாக நடைபெறும். உத்தியோகத்தைப் பொறுத்தவரை இதுவரை தாமதித்து வந்த பதவி உயர்வு இப்பொழுது தானாக வரலாம். சேமிப்பு உயரும்.

**குருப்பெயர்ச்சிக் காலம்**

ராகு-கேது பெயர்ச்சி காலத்தில் குருப்பெயர்ச்சி நிகழ்கிறது. 11.5.2025 அன்று குரு பகவான், மிதுன ராசிக்கு பெயர்ச்சியாகிறார். இதன் விளைவாக எதிரிகளின் பலம் மேலோங்கும். இலட்சியங்கள் நிறைவேறுவதில் சில தடைகள் குறுக்கிடும். கொடுத்த வாக்கைக் காப்பாற்ற இயலாது. ஒரு கடனை அடைக்க மற்றொரு கடன் வாங்கும் சூழல் உருவாகும். பொதுவாழ்வில் உள்ளவர்கள் வீண் பழிக்கு ஆளாக நேரிடும். ஒக்டோபர் 8ஆம் திகதி குரு பகவான், அதிசாரமாக கடக ராசிக்கு பெயர்ச்சியாகிறார். அப்போது குரு பார்வை உங்கள் ராசியில் பதிகிறது. எனவே நல்ல காரியங்கள் பலவும் இல்லத்தில் நடைபெறும். திடீர் முன்னேற்றம் ஏற்படும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலக வங்கித்...

தாரத்தை மேம்படுத்தி சிறந்த எதிர்காலத்தை உருவாக்கும் முயற்சியின் ஒரு முக்கிய அங்கமாக அஜய் பங்காவின் வருகை உள்ளது.

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவினால் விடுக்கப்பட்ட அழைப்பின் பேரில் அஜய் பங்கா இலங்கைக்கு வருகை தரவுள்ளார். (ம-7,4)

## பற்றைக் காட்டு...

கப்பட்டவராவார்.

வல்வெட்டித்துறைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வல்லாவத்தை, சத்திரத்தைப் பகுதியில் உள்ள பற்றைக்குள் இளைஞர் ஒருவரின் சடலம் காணப்படுவதாக வல்வெட்டித்துறை பொலிஸாருக்குத் தகவல் கிடைக்கப் பெற்றது.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு 8 மணியளவில் சம்பவ இடத்துக்குச் சென்ற கரவெட்டி திடீர் மரண விசாரணை அதிகாரி வேலுப்பிள்ளை பாஸ்கரன் சடலத்தை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு வல்வெட்டித்துறை பொலிஸாருக்கு அறிவுறுத்தினார்.

நேற்று செவ்வாய்க்கிழமை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் மரண விசாரணை இடம்பெற்றதைத் தொடர்ந்து பிரேத பரிசோதனைக்காக சடலம் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ம-7,4,33,60)

## காரைநகரில்...

தாக ஊர்காவற்றுறைப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

காரைநகரில் முன்னாள் தவிசாளரும், தமிழ் மக்கள் கூட்டணியின் வேட்பாளருமான கணேசபிள்ளை பாலசந்திரன் என்பவர் மீதே தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

காரைநகரில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு தான் மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்த வேளை, மற்றுமொரு மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் தன்னை வழிமறித்துத் தாக்கி, தனது சங்கிலியையும் அறுத்துச் சென்றுள்ளதாக ஊர்காவற்றுறைப் பொலிஸாரிடம் முறைப்பாடு வழங்கியுள்ளார்.

முறைப்பாட்டின் பிரகாரம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7,4)

## அமைதியான...

28 மாநகர சபைகள், 36 நகர சபைகள், 275 பிரதேச சபைகள் என மொத்தம் 339 உள்ளூராட்சி சபைகளுக்கு இந்தத் தேர்தல் நடைபெற்றது. (ம-7,4)

## உள்ளூராட்சித்...

கையில்,

தேசிய மக்கள் சக்தி வெற்றிகரமான தேர்தல் பிரசாரத்தை மேற்கொண்டுள்ளதாகவும், தாங்கள் வெற்றிகரமான முடிவுகளைப் பெறுவோம் என்று தான் உறுதியாக நம்புவதாகவும் அவர் கூறினார்.

சமீபத்திய பொதுத் தேர்தல் மற்றும் ஜனாதிபதித் தேர்தல்களுக்குப் பிறகு நாட்டில் உருவாக்கப்பட்ட புதிய அரசியல் கலாசாரத்தை மக்கள் பின்பற்றுவார்கள் என்று தான் நம்புவதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

"தேர்தல் வெற்றியை மக்கள் அமைதியாகக் கொண்டாடுவார்கள் என்று நாங்கள் நம்புகிறோம். தேர்தல் பிரசாரத்தின்போது மட்டுமல்ல, தேர்தலுக்குப் பின்னரும் ஜனநாயகத்தை நிலைநிறுத்துவது மிகவும் முக்கியம்," என்று அவர் கூறினார். (ம-7,4)

## நாடு முழுவதும்...

நொச்சி மாவட்டத்தில் 61 சதவீத வாக்குகளும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 61.32 சதவீத வாக்குகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

பதுளை மாவட்டத்தில் 60 சதவீத வாக்குகளும் கொழும்பு மாவட்டத்தில் 50 சதவீத வாக்குகளும் பொலநறுவை மாவட்டத்தில் 53 சதவீத வாக்குகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

நுவரெலியா மாவட்டத்தில் 60 சதவீத வாக்குகளும், களுத்துறை மாவட்டத்தில் 55 சதவீத வாக்குகளும் அநுராதபுரம் மாவட்டத்தில் 60 சதவீத வாக்குகளும் குருநாகல் மாவட்டத்தில் 51 சதவீத வாக்குகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

புத்தளம் மாவட்டத்தில் 55 சதவீத வாக்குகளும் திகாமடுல்ல மாவட்டத்தில் 63 சதவீத வாக்குகளும் மொனராகலை மாவட்டத்தில் 61 சதவீத வாக்குகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

கண்டி மாவட்டத்தில் 55 சதவீத வாக்குகளும் இரத்தினபுரி மாவட்டத்தில் 60 சதவீத வாக்குகளும் கேகாலை மாவட்டத்தில் 58 சதவீத வாக்குகளும் திருகோணமலை மாவட்டத்தில் 68 சதவீத வாக்குகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

மேலும், கம்பஹா மாவட்டத்தில் 56 சதவீத வாக்குகளும் மாத்தறை மாவட்டத்தில் 58 சதவீத வாக்குகளும் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் 60 சதவீத வாக்குகளும் பதிவு செய்யப்பட்டுள்ளதாக மாவட்டத் தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ம-7,4)

## கிளிநொச்சி...

பிரதேச சபையின் 21 வட்டாரங்களில் 20 வட்டாரங்களில் தமிழரசுக் கட்சி வெற்றி பெற்றுள்ளது.

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையில் 8 வட்டாரங்களில் 6 வட்டாரங்களில் தமிழரசுக் கட்சி வெற்றி பெற்றுள்ளது.

பூநகரி பிரதேச சபையில் 11 வட்டாரங்களில் 10 வட்டாரங்களில் தமிழரசுக் கட்சி வெற்றி பெற்றுள்ளது. (ம-7,4)

*(இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை கிடைக்கப்பெற்ற உத்தியோகபூர்வமற்ற முடிவுகள்)*

## தேசிய...

மாவட்டத்தின் பலாங்கொடை நகர சபை, காலி மாவட்டத்தின் அம்பலாங்கொடை நகர சபை, அம்பாந்தோட்டை மாநகர சபை, பதுளை மாவட்டத்தின் ஹப்புத்தளை நகர சபை, அம்பாந்தோட்டை மாவட்டத்தின் தங்காலை நகர சபை ஆகியவற்றில் தேசிய மக்கள் சக்தி வெற்றி பெற்றுள்ளது.

எனினும் பல தொகுதிகளில் அமோக வெற்றியைப் பெற ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையிலான கட்சி தவறியுள்ளது.

பல தொகுதிகளில் எதிர்க்கட்சிகளும் கணிசமான [illegible] களைப் பெற்றுள்ளது. இதன்மூலம் இலகுவாக ஆட்சி அமைப்பதில் தேசிய மக்கள் சக்திக்கு பெரும் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது. அறுதிப் பெரும்பான்மையை அந்தக் கட்சி இதுவரை பெறவில்லை.

எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்தால் மிகவும் இலகுவாக ஆட்சி அமைக்க முடியும் என்ற நிலைப்பாடே தற்போது காணப்படுகிறது.

தேசிய மக்கள் சக்தி வெல்லும் என எதிர்பார்க்கப்பட்ட பல தொகுதிகளில் தோல்வி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ம-7,4)

*(இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை கிடைக்கப்பெற்ற உத்தியோகபூர்வ முடிவுகளின்படி)*

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத
திகதி 2025.05.06
சீட்டிழுப்பு இலக்கம் 5823
J 6 9 5 9 8 0
அத சம்பத
J 5 9 8 0
சீட்டிழுப்பு இலக்கம் 0398
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2025.05.06
சீட்டிழுப்பு இலக்கம் - 1853
U 22 46 66 79 U
72359

மெகா பவர்
திகதி 06/05/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2171
K 22 12 20 42 69

ஜய
திகதி 2025.05.06
சீட்டிழுப்பு இலக்கம் 091
J 7 3 2 7

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4065
சீட்டிழுப்பு திகதி 06.05.2025
C 15 52 71 76 C

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.05.06
சீட்டிழுப்பு இலக்கம் 1132
மகரம் 42 44 47 50 மகரம்
43005 15

உத்தியோகபூர்வ முடிவுகள்
06.05.2025 வெற்றி வாரம் 531
H 6 6 5 3 8 5
55977
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.36.778.318.40
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2797
சீட்டிழுப்பு திகதி 2025.05.06 தினம் செவ்வாய்க்கிழமை
12 18 32 49 Y
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.60,434,438.40
DLB

சனிதா
திகதி 06.05.2025 வெற்றி வாரம் 4958
03 28 38 47 D
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 62,828,618.00
81189
DLB

சசிரி
வெற்றி வாரம் 677
சீட்டிழுப்பு திகதி 06.05.2025
செவ்வாய்க்கிழமை
02 25 29
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.200,000.00
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4509
சீட்டிழுப்பு திகதி 06.05.2025 தினம் செவ்வாய்க்கிழமை
19 27 29 39 ரிஷபம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.7,274,549.60
186320
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
P 26 03 10 45 63
1973
06.05.2025
அடுத்த சுப்பர் ஜக்பொட்
DLB

அத கோடிபதி
செவ்வாய்க்கிழமை
வெற்றி வாரம் : 2623
சீட்டிழுப்பு திகதி : 2025.05.06
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.52,494,407.20
36 51 56 66 V
923554
DLB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய வகுப்புக்கள்

மகளிருக்கான Cakes, Icing, Beautician, கூந்தல் அலங்கரிப்பு, தையல் பயிற்சிகளுக்கு விசேட கட்டணச் சலுகைகளுடன் கிழமை நாள்/ சனி - ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன!

### யாழ் கலாலயா பயிற்சியகம்

விக்ரோறியா வீதி, (யாழ். போதனா வைத்தியசாலை பின் வீதி)

**077 711 0383, 074 217 0383**
(Whatsapp No)

(C-2909)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

### ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-2913)

**076 825 7716** (ஆகாஸ்)

## காணி விற்பனைக்கு

சுன்னாகம் கந்தரோடை வீதி, ஆலடிச் சந்தியில் இருந்து 200 m தூரம் கணக்கர் வளவில் தென்னைமரம், மலசலகூட வசதியுடன் வெறும் காணி விற்பனைக்குண்டு.

**077 311 6568**

(4121)

## மணப்பெண் தேவை

1. புங்குடுதீவு இந்து, 1991, பூராடம், Bussiness, Swiss + Canada Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. 52067
2. கொக்குவில், இந்து, 1990, கேட்டை, Graduate, Reading Phd, Canada Citizen, மாப்பிள்ளைக்கு பெண் தேவை. 46762
3. தெல்லிப்பழை, இந்து, 1997, கேட்டை, Canadian University Graduate, Canada Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. 45844
4. சித்தங்கேணி, இந்து, 1994, சுவாதி, Graduate, Charted Accountant, USA, Vegetarian மாப்பிள்ளைக்கு பெண் தேவை. 49957
5. சங்கானை, இந்து, 1987, ரேவதி, Msc in Engineering, UK Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. 43866
6. புலோலி, இந்து, 1982, விசாகம், B.Sc USA, citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. 38431
7. சாவகச்சேரி, இந்து, 1984 ரேவதி, MBBS Dental Doctor, USA Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. 34626
8. மட்டுவில், இந்து, 1985, கேட்டை, B.Eng (Hons) Engineering, UK citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. 51409
9. வல்வெட்டி, இந்து, 1986, சதயம், Graduate, Bussiness, UK citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. 50435
10. இணுவில் இந்து, 1986, ரோகிணி, Graduate, Norway Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. 31506

எம்மிடம் எல்லா ஜாதியிலும் எல்லா நாட்டிலும் Unmarried மற்றும் Divorce மாப்பிள்ளைகளும் மணப்பெண்களும் உண்டு. (C-2914)

S.Sharma J.P
www.thaalee.com
077 539 3728
077 803 8193

### யாழ்ப்பாணப்பல்கலைக்கழக பட்டதாரிக் கற்கைகள் பீடத்தின் வெள்ளிவிழா நிகழ்வு தொடர்பான விசேட கலந்துரையாடல்

நேரம் : 2025.05.11 (ஞாயிற்றுக்கிழமை) முற்பகல் 10.00 மணி
இடம் : பட்டதாரிக் கற்கைகள் பீடம்

பட்டதாரிக் கற்கைகள் பீடத்தில் உயர்பட்டக் கற்கைகளை நிறைவு செய்த அனைத்துப் பழைய மாணவர்களையும் மேற்படி கலந்துரையாடலில் கலந்து தங்களது காத்திரமான ஆலோசனைகளை வழங்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

நன்றி

பழைய மாணவர் சங்கம்
பட்டதாரிக் கற்கைகள் பீடம்

(4114)

## Maths & IQ Classes

தரம் 3,4,5ம் ஆண்டு மாணவர்களுக்கான நுண்ணறிவு (IQ) வகுப்புக்கள் நேரடியாகவும் (இணுவில்) மற்றும் Zoom ஊடாகவும் கற்பிக்கப்படும். (பிரத்தியேக மற்றும் குழு வகுப்புக்களுக்குத் தொடர்பு கொள்ள முடியும்) தரம் 6 - 10 வரையான கணித வகுப்புக்கள் (தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலமான)

MR.S.THARSHAN
077 454 0529

(4102)

## 50 ஆண்டுகால சேவையில்

E-Son's
மேன்மை
PARLOUR SERVICE

100 பேர் அமரக்கூடிய விசாலமான மண்டபம்

ஈ - சன்ஸ்

148, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
021 222 2695 / 077 429 0613

(C-2907)

## ஊர் கோழிக் குஞ்சுகள்



ஒரு மாத, ஒரு கிழமை, ஒரு நாள் ஊர்க்கோழி குஞ்சுகளை தினமும் பெற்றுக் கொள்ளலாம்.
இடம் : சுழிபுரம்

**077 332 2433**

(1107)


## தமிழரசுக்...

சபைகளை இலங்கைத் தமிழரசுக் கட்சி கைப்பற்றியுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மாந்தை கிழக்கு பிரதேச சபையில் இலங்கைத் தமிழரசுக் கட்சியும் துணுக்காய் பிரதேச சபையில் இலங்கைத் தமிழரசுக் கட்சியும் வவுனியா நகர சபையில் தேசிய மக்கள் சக்தி, இலங்கைத் தொழிலாளர் கட்சி என்பன தலா 4 ஆசனங்களினை பெற்று சமநிலை வகிக்கின்றன. மன்னார் மாவட்டத்தில் மன்னார் நகர சபையை இலங்கை தமிழரசுக் கட்சியும் நானாட்டான் நகர சபையை தேசிய மக்கள் சக்தியும் மாந்தை மேற்கு பிரதேச சபையை இலங்கைத் தமிழரசுக் கட்சியும் கைப்பற்றியுள்ளது.

மேலும் கிழக்கு மாகாணத்தில் பெருவாரியான உள்ளூராட்சி சபைகளில் தமிழரசு கட்சி வாகை சூடியதோடு ஆளும் கட்சியான தேசிய மக்கள் சக்தி பல சபைகளில் ஒரு ஆசனத்தைக் கூட பெற முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டது.

அந்த வகையில் திருகோணமலை மாநகர சபையை தமிழரசு கட்சி ஆறு மேலதிக ஆசனங்களுடன் கைப்பற்றியது அதேபோன்று வேரவில் பிரதேச சபையை ஐந்து மேலதிக ஆசனங்களுடன் கைப்பற்றியது திருகோணமலை பட்டணம் சூழலும் பிரதேச சபையும் தமிழரசு கட்சி வசமாகியது.

அதேபோன்று மட்டக்களப்பு மாவட்டத்தின் வவுண தீவு பிரதேச சபையின் சகல ஆசனங்களையும் தமிழரசு கட்சி தமதாக்கியது அங்ஙனம் கோரளைப் பற்று பிரதேச சபை, எருவில் பிரதேச சபை, வாகரை பிரதேச சபை, மண்முனை தென்மேற்கு பிரதேச சபை, வாழைச்சேனை பிரதேச சபை என மட்டக்களப்பு மாவட்டத்தின் சகல பிரதேச சபைகளிலும் தமிழரசு கட்சி பெரும்பான்மை பலத்தினைப் பெற்றுள்ளது.

அதேபோன்று அம்பாறை மாவட்டத்தின் காரைதீவு பிரதேச சபையினையும் தமிழரசு கட்சி தம்வசப்படுத்தியுள்ளது. (இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை கிடைக்கப் பெற்றவை)

(ம-4,7)


ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ!

## கௌரவிப்பும் பொதுக்கூட்டமும்

தலைவர் : ப.இந்திரகுமார்
இடம் : J.J Guest house
NO.396/1, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(வேல் மோட்டோர்ஸ் அருகாமையில்)

### கௌரவிப்பு

2024ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் 130 புள்ளிகளுக்கு மேல் பெற்ற விஸ்வகுல நகைத்தொழிலாளர்களின் பிள்ளைகளை கௌரவித்தலும் 70 வயதிற்கு மேல் உள்ள நகைத்தொழிலாளர்களை கௌரவித்தலும் 01.06.2025ல் கௌரவிப்பு இடம்பெறவிருப்பதால் 15.05.2025 ற்கு முன்னதாக விண்ணப்பங்களை தந்துதவவும்.

### பொதுக்கூட்டம்

10.06.2025ல் பொதுக்கூட்டம் இடம்பெறவுள்ளது. அங்கத்தவர்களும் விஸ்வகுல நகைத்தொழிலாளர்கள் அனைவரையும் வருகை தரும்படி அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

Whatsapp: 077 222 8482
231/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

T.P: 077 236 7494
ஜெ.மனோகர்
செயலாளர்

(4110)

## Smart Science Academy

### A/L CHEMISTRY

Day Class
2025 Organic
2026 Inorganic

ஆரம்பம் : 11.05.2025
ஆசிரியர் : திரு.S.சுரேஸ்குமார் B.Sc (Hons) PGDE
அனுமதிகள் 40 பேருக்கு மாத்திரமே

154A, Navalar Rd, Jaffna. | 0775559028, 0773513734

(4097)

## விசேட சலுகைகள்

வெளிநாடுகளுக்கான 11Kg ற்கு மேற்பட்ட பொதிகளுக்கான 1Kg க்கான கட்டணம்

UK - 1380/=
Australia - 2130/=
France - 1930/=
Germany - 1880/=

மற்றைய நாடுகளுக்கும் விசேட சலுகைகள்

திருமுருகன் பொதிகள் சேவை
321,K.K.S Road, Jaffna
077 755 4528

கிளைகள் : கொழும்பு, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, மல்லாவி

(1108)

## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

V2 TRAVELS

எமது கிளைகள்
• கிளிநொச்சி • சுன்னாகம்
• சாவகச்சேரி • மானிப்பாய்
• நெல்லியடி • பருத்தித்துறை
• திருகோணமலை • வல்வெட்டித்துறை
• கோப்பாய் • புத்தூர்
• பண்டத்தரிப்பு • சங்கானை
• கொழும்பு

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

(C-2912)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினரால் இல.[illegible], பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.05.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org